# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு சுசு | திருவள்ளுவர் ஆண்டு உ00உ, ஐப்பசி நவம்பர் 1971 | பரல் ரு


## பதிப்புத் துறையிற் பட்டறிவு

(ரு)

மெய்கண்ட சாத்திரம் பதினான்கின் பழம் பதிப்புக்களைப் பற்றிய குறிப்புக்களை முன்னிதழிற் கண்டு தெளிந்தோம். இனி மதுரையம்பதியிலே நடைபெற்ற 64 திருவிளையாடல்களை விளக்குந் திருவிளையாடற் புராணத்தின் பழம் பதிப்புக்களைப்பற்றிய குறிப்புக்களை இங்கே கண்டு மகிழ்வோம்.

'திருவிளையாடற்புராணம்' என்பது மதுரைத் திருப்பெரும் பதியிலே கோயில் கொண்டிருக்கும் முழுமுதற கடவுளாகிய அங்கயற்கண்ணி (மீனாட்சி)யோ டமர்ந்திருக்கும் ஆலவாயண்ணல் (சோமசுந்தரேசர்) உயிர்களெல்லாம் உய்தி பெறும் பொருட்டுப் பேருள்ளங்கொண்டு நிகழ்த்தி யருளிய திருவிளையாட்டுக்களை உணர்த்துஞ் செந்தமிழ் நூலாகும். இத்திருவிளையாடற் கதைகளைப்பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், கல்லாடம் ஆகிய பழந்தமிழ் நூல்களிற் காணப்பெறுகின்றன.

திருவிளையாடல்களை உணர்த்தும் பொருட்டு எழுந்த தமிழ் நூல்களில் முதற்கண் தோன்றியது 'திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண'மும் அடுத்துத் தோன்றியது 'பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராண'முமாகும்.

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் 'வேம்பத்தூரார் திருவிளையாடல்' எனவும், 'பழைய திருவிளையாடல்' எனவும் வழங்கப்பெறும். இதனை இயற்றியவர் செல்வி

நகர்ப் பெரும்பெற்றப் புலியூர் நம்பி என்னும் பெரும் புலவராவர். இவர் 700 ஆண்டுகட்கு முற்பட்டு வாழ்ந்தவர் என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாகும். இதனை 1906ஆம் ஆண்டில் முதன் முதல் தமக்குக் கிடைத்த 12 ஏட்டுச் சுவடிகளை நன்கு ஆராய்ந்து அச்சிட்டுப் புகழ் பெற்றவர் முதுபெரும் புலவர் உ. வே. சாமிநாதையரவர்களாவர். இதன் இரண்டாம் பதிப்பு 1927ஆம் ஆண்டில் மேற்படி மதிப்புமிகு ஐயரவர்களாலே கேசரி அச்சுக் கூடத்திலே பதிப்பிக்கப்பெற்றது. இந் நூலை யாதொரு கவலையுங் கொள்ளாமல் பதிப்பித்து வெளியிடு வதற்கு வேண்டிய பொருளை இராமநாதபுரம் மாமன்னர் இராச இராசேசுவர சேதுபதியவர்கள் வழங்கியுள்ளனர். இதனை அச்சிடுவதற்குக் கிடைக்கப்பெற்ற ஏட்டுச்சுவடிகளிற் கண்ட பல பாட வேறுபாடுகளையும் பிழைகளையும் ஒப்பு நோக்கித் திருத்துதற்குத் தமக்குப் பேருழைப்பும் பெரும் பொருட் செலவும் ஏற்பட்டன என்று வணக்கத்துக்குரிய ஐயரவர்கள் தமது முன்னுரையிற் குறிப்பிட்டிருப்பது நெஞ்சையுருக்குவ தாகின்றது. நூல்களைப் பதிக்கும் முறையில் உயர்திரு ஐயரவர்கள் தனியிடம் பெற்றுள்ளார்கள் என்றால் அது மிகையாகாது. அவர்கள் எழுதியிருக்கும் ஆராய்ச்சி முன்னுரையும் இரு திருவிளையாடற் புராணங்களிலுள்ள வேறு பட்ட சிறந்த கருத்துக்களும் நூலாராய்வார்க்குக் கழிபேருவகை யூட்டுவனவாகும். இதன்கண் பாட்டுக்கள் சீர் பிரிக்கப் பெற்றிருப்பதோடு செய்யுள் முதற்குறிப்பகரவரிசையும் அருஞ் சொல் சொற்றொடரகரவரிசையும் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இது 1753 பாட்டுக்களைக் கொண்டது. இந்நூலை விளக்க வுரையோடு வெளியிட வேண்டுமென்ற கழகத்தின் விருப்பம் இறையருளால் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடையேன். உயர்திரு ஐயர் அவர்கட்குச் சென்னை மாநிலக் கல்லூரியின் முன்பக்கம் சிலை அமைத்திருப்பது மட்டும் போதாது. அவர்கள் வாழ்ந்த 'தியாகராச விலாசம்' என்ற செந்தமிழ் இல்லம் அமைந்திருக்கும் திருவெட்டீசுரன்பேட்டைக்கு 'உ. வே. சா நகர்' என்று பெயர் சூட்ட வேண்டுமென்பது எனது அவா. மாநகராட்சி அதனை நிறைவேற்றுமாக!

1837ஆம் ஆண்டில் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் பல ஏட்டுச் சுவடிகளைக்கொண்டு திருத்தணிகைச் சரவணப் பெருமாளையராலும் நாகூர் தியாகராய முதலியாராலும் ஆராய்ச்சி செய்யப் பெற்றுத் திரு விசாகப்பெருமாளையரது கல்வி விளக்க அச்சுக்கூடததிற் பதிக்கப்பெற்றது. இதன் முகப்பில் 'அச்சிற் பதித்தவர் சிறப்பு' என்று காஞ்சிபுரம்

குமாரசாமி தேசிகர் இயற்றிய அகவற்பா வுள்ளது. இந்நூல் கைசெய்தாளில் அச்சிடப் பெற்றிருக்கின்றமையால் தாள்கள் முறியாமலும் பொடிபடாமலும் இருக்கின்றன.

செந்தமிழ்ச் செல்வி 45ஆம் சிலம்பு 12ஆம் பரலிலுள்ள 3ஆவது கட்டுரையில் 1839இல் அச்சிடப்பெற்ற கௌரி பஞ்சாங்கத்திலுள்ள புத்தக விலைப்பட்டியில் இந்நூல் குறிக்கப் பெற்றுள்ள செய்தி படித்திருப்பீர்கள். இதன் முகப்புத்தாள் (Title Page) காணப்பெருவிடினும் இறுதியிலுள்ள பிழை திருத்தப் பட்டியின் முன் பக்கத்தில் நூற் பெயரும், அச்சிற் பதித்தவர்களின் பெயர்களும், அச்சுக்கூடப் பெயரும், அச்சிடப் பெற்ற ஆண்டும் குறிக்கப் பெற்றிருப்பது ஒரு புதுமையாகும்.

சேக்கிழார் பெரிய புராணம் பதிக்கப் பெறுவதற்குச் சில ஆண்டுகட்கு முன்பே திருவிளையாடற் புராணம் வெளி வந்து விட்டது கவனிக்கற்பாலது.

1879இல் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் திருத்தணிகை சரவணப் பெருமாளையரால் ஆராயப்பட்ட முதற் பதிப்பு மீண்டும் மயிலை செந்தில்வேலு முதலியாரால் வர்த்தமான தரங்கிணி அச்சுக்கூடத்திற் பதிக்கப்பெற்று வெளிவந்துளது. அதன்கண் புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் இயற்றிய ‘திரிசொற் பொருள் விளக்கம்’ நூலுக்கு முன் உள்ளது

1882இல் திருவிளையாடற் புராணம் திரு. வீரப்ப செட்டியாரால் திரு சரவணப் பெருமாளையர் பதிப்பின் படியே கலாரத்நாகரம் அச்சுக்கூடத்திற் பதிக்கப்பெற்றது.

திருவிளையாடற்புராணம் சோடசாவதானம் தி. க. சுப்பராய செட்டியார் இயற்றிய பதவுரை விளக்கவுரைகளுடன் முதலாவது மதுரைக் காண்டம் 1884ஆம் ஆண்டு புரட்டாசித் திங்களிலும், இரண்டாவது மூன்ருவது கூடற் காண்டமும் திருவாலவாய்க் காண்டமும் ஒன்ருக இணைக்கப்பெற்று *1884 ஐப்பசித் திங்களிலும் கா. சிவஞான ஐயரால் ஆதிகலாநிதி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றன.

கழகத்தை நிறுவிய என் அருமைத் தமையனர் திருவரங்கனர்க்கு இவ்வுரை நூற்படிகள் 300க்கு மேல் கட்டடஞ் செய்யப் பெருத நிலையில் விற்கப்பெருமல் எழுமூர் பெருந்தெரு

*1962 அரசினர் தமிழ் நூல் விளக்க விவரண அட்டவணையில் 1887 என்று தவருகக் குறிக்கப்பட்டுள்ளது.

வின் பக்கமுள்ள சந்தில் உரையாசிரியரின் உறவினர் ஒருவர் இல்லத்திலே இருப்பது தெரியலாயிற்று. பின்பு அவர்கள் உடையவரையணுகி 2 பாகங்கள் அடங்கிய தொகுதி ஒன்றுக்கு விலை பேசிப் பத்துப் பத்துத் தொகுதிகளாக வாங்கிக் கட்டடஞ் செய்து விளம்பரப்படுத்தி விற்றுக் கொடுத்தனர். உரையாசிரியரின் குடும்பத்தினர் திருவரங்கனுர் காலத்தாற் செய்த உதவியினைப் பெரிதும் பாராட்டி நன்றி நவின்றனர். அதே போல் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் எழுதிய பெரிய புராண உரை நூற்படிகளையும் வாங்கி விற்றுக் கொடுத்த செய்தி 46ஆம் சிலம்பு முதற் பரலிற் கண்டிருப்பீர்கள்.

இதற்குப் புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், திருவனந்தபுரம் மகாராசா கல்லூரித் தமிழ்த் தலைமைப் புலவர் சி. சாமிநாத தேசிகர், தஞ்சை மிஷன் கல்லூரித் தமிழ்ப் புலவர் ஐயாசாமிப் பிள்ளை, தில்லைவிடங்கன் வித்துவான் மாரிமுத்துப் பிள்ளையின் பேரர் சு. வேலுசாமிப் பிள்ளை, இந் நூலுரையாசிரியரின் மாணுக்கர் பிரம்பூர் கோவிந்தராச கவிராயர் ஆகிய ஐவரும் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளனர். காஞ்சிபுரம் ஏகாம்பர சிவயோகியார் எழுதிய இப்புராணத்தில் இலைமறைகாய்போல் பொதிந்து கிடக்கும் 'சைவ சித்தாந்தக் கருத்துக்கள்' சிறப்புப் பாயிரத்துக்குப்பின் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

இப்பதிப்பின்கண் பாட்டுக்கள் சீர்பிரிக்கப் பெறவில்லை. பாட்டு முதற் குறிப்பகர வரிசை கிடையாது. ஒவ்வொரு படலத்துக்கும் அழகான விளக்கப்படம் வெள்ளைத் தாளில் அச்சிட்டுச் சேர்த்திருப்பது கவர்ச்சி தருகின்றது.

இத் திருவிளையாடல் உரைநூலை வைத்திருந்தவர் இல்லத்திலே நீண்ட காலமாக விற்கப்பெருமல் 1894இல் அச்சிடப்பெற்ற சிதம்பரசுவாமிகள் அருளிச்செய்த திருப்போரூர் சந்நிதிமுறை உரையுடன் கூடிய பதிப்பு 200 படிகட்கு மேல் இருந்தன. உரை எழுதியவர்கள் திரு. தி. க. சுப்பராய செட்டியாரவர்களும் திரு. கா. ஆலால சுந்தரம் பிள்ளையவர்களுமாவர். அவற்றையும் திருவரங்கனுர் வாங்கி விற்றுக் கொடுத்தனர் என்பது பாராட்டுதற்குரியது.

1897இல் திருவிளையாடற் புராணம் மதுரைக் காண்டம் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் ஈக்காடு இரத்தினவேலு முதலியார் இயற்றிய பொழிப்புரையோடு சென்னை

ஸ்டார் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற் பதிக்கப்பெற்றது. இதன் இரண்டாங் காண்டமாகிய கூடற்காண்டம் ஷியார் எழுதிய பொழிப்புரையோடு 1899இல் பதிக்கப்பெற்றது. இதன் மூன்றாங் காண்டமாகிய திருவாலவாய்க் காண்டம் திரு. இரத்தினவேலு முதலியாரும்* தத்புருஷசிவன் என்ற தீக்ஷா நாமம் பெற்ற முத்தமிழ் ரத்நாகரம் ம. தி. பாநு கவியவர்களும் எழுதிய பொழிப்புரையோடு மேலே குறிப்பிட்ட அச்சுக் கூடத்திலே அச்சிடப்பெற்றது இவ்விரு உரையாசிரியர்களில் எவரெவர் எந்தெந்தப் பாடல்கட்கு உரை எழுதினர் என்பது யாண்டுங் குறிக்கப்பெறவில்லை. பாட்டுக்கள் சீர்பிரிக்கப் பெற்றுள்ளன. முதன் முதல் சீர்பிரிக்கப் பெற்றுள்ள பதிப்பு இதுவே யாகும். இவ்வுரை நூலுக்குப் பாட்டுமுதற்குறிப்பகர வரிசை கிடையாது. தி. க. சுப்பராய செட்டியார் உரைப் பதிப்பிலுள்ள விளக்கப் படங்களிலே சிறிய மாற்றஞ் செய்து இப்பொழிப்புரைப் பதிப்பிலே சேர்த்திருப்பதாகத் தெரிகிறது. பாநு கவியவர்கள் கந்தபுராணம் முழுமைக்கும் பொழிப்புரை எழுதியுள்ளார்கள்.

1896இல் திருவிளையாடற் புராணம் மூலப்பதிப்பு சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகளால் பல ஏட்டுச் சுவடிகளையும் முன்பதிப்புக்களையுங் கொண்டு சரிபார்க்கப் பெற்றுச் சென்னை ஆறுமுக விலாச அச்சுக் கூடத்திலே பதிக்கப்பெற்றது. 16ஆவது வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலத்திற் சில பாட்டுகட்கும், 44ஆவது இசைவாது வென்ற படலத்தில் சில பாட்டுகட்கும், 65ஆவது அருச்சனைப் படலத்தில் சில பாட்டுகட்கும் உரை விளககம் எழுதப்பட்டிருக்கிறது. பாட்டுக்கள் சீர்பிரிக்கப் பெறவில்லை. பாட்டு முதற் குறிப்பகர வரிசையுங் கிடையாது.

1884ஆம் ஆண்டில் திருவிளையாடற் புராணம் ஞானசம்பந்தப் பிள்ளை பதிப்பு. முதலாவது மதுரைக் காண்டம் மட்டும் மதுரை இராமசாமிப் பிள்ளை என்னும் ஞானசம்பந்தப் பிள்ளை பல பாடங்கொண்டு எழுதிய பொழிப்புரையுடன் இந்து தியாலஜிகல் அச்சுக் கூடத்திற் பதிக்கப் பெற்றுள்ளது. எஞ்சிய காண்டங்கட்கு இவர்களே உரை எழுதியதாகத் தெரியவில்லை.

---

* தேவகோட்டை வயிநாகரம் வே இராமநாதன் செட்டியாரவர்களுடைய தீட்சா நாமப் பெயர் 'தத்புருஷ தேசிகர்' என்பதாகும். வடமொழியில் தீட்சை பெறுவதால் வடமொழிப் பெயர்கள் நுழைவதைக் காண்கிறோம்.

## 1917 திருவிளையாடற் புராணம் மூலப்பதிப்பு

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரவர்கள் மாணாக்கர்களில் ஒருவராகிய சுவாமிநாத பண்டிதரால் பல தேசப் பழைய ஏட்டுப் பிரதிகளையும் ஆலாசிய மான்மிய மென்னும் முதனூலையுங் கொண்டு பரிசோதிக்கப் பெற்றுச் சென்னை வித்தியாநுபாலன அச்சியந்திர சாலையில் பதிக்கப்பெற்றது. இதன்கண் புதிதாக எழுதிய குறிப்புரை ஒவ்வொரு பக்கத்தின் அடியிற் சேர்க்கப் பெற்றுள்ளது. பாட்டுக்கள் சீர்பிரிக்கப் பெற்றிருப்பினும் பாட்டு முதற் குறிப்பகர வரிசை சேர்க்கப் பெறவில்லை.

புத்தகங்களை அழகாகவும் கவர்ச்சியாகவும் அச்சிடுவதில் திரு. சுவாமிநாத பண்டிதரவர்களையும் பாம்பன் குமரகுருதாச சுவாமிகளையும் முதுபெரும்புலவர் சாமிநாதையரவர்கட்கு அடுத்து வைக்கப்பெறுந் தகுதியுடையவர்கள் என்று கழக அமைச்சரவர்கள் சொல்லுவதுண்டு. 1920ஆம் ஆண்டில் தாம் திரு. பண்டிதரவர்களைக் கொண்டு பரிசோதித்துப் பதிப்பித்த 'சைவநூற் சாரசங்கிரகம்' என்ற நூலால் தெரிய வந்தது என்று சொல்லுவர்.

இந்நூலின் பதிப்புரையில் திரு. பண்டிதரவர்கள் அடியிற் கண்டவாறு கூறியிருப்பது நூல் பதிப்பிடுவதில் புலவர்கள் பட்ட பாடுகளைத் தெரிவிக்கின்றது.

"திருவிளையாடற் புராணத்தை முதனூலோடும் பல தேசத்துப் பழைய பிரதிருபங்களோடும் ஒத்துப் பார்த்துச் செப்பஞ் செய்து அச்சிட்டு வெளிப்படுத்தக் கருதிப் பின்னர்ப் பாண்டி நாட்டிற்குச் சென்றபோது மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகளாதீனத்தில் வடமொழி தென்மொழிகளின் மகா பாண்டித்தியம் பெற்று முன்னர் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் வடமொழியில் வல்ல பண்டிதர் நால்வர்க்கு இரண்டாயிர ரூபா வேதனங் கொடுத்து அவர்களோடு அளவளாவி வடமொழி ஆலாசிய மகாத்மியத்திற்குச் சிறந்த தமிழுரை ஒன்று இயற்றி வைத்திருந்தமை அறிந்து இப்பொழுது அவ்வாதீனப் பதியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைத் தரிசித்து வினவியபோது சந்நிதானம் அகமிக மகிழ்ந்து முகநனி மலர்ந்து பலர்க்கும் பயன்படுமாறு அதனைத் தந்தருளிய பெருங் கருணைத் திறத்தை எதற்கொப்பிடுவோம்! என்னென்று சொல்லிப் புகழ்வோம்!

"எல்லா நூல்களும் அச்சுவாகன மேறி அங்குமிங்கும் எங்கும் பவனி வரும் இற்றை ஞான்றும் கற்பாருமின்றி விற்பாருமன்றிச் *செல்வாய்ப் பட்டும், பாணவாய்ப் பட்டும் சிதைந்து போகும் ஏட்டுப் பிரதிகளைப் பாடபேதம் பார்க்க விரும்பிக் கேட்கும்போது அவற்றிற்குரியார் மனம் ஒருப்படாதவர்களா யிருக்கின்றார்கள். அங்ஙனமாகவும் இரண்டாயிர ரூபா செலவு செய்து தமிழுரை எழுதப்பட்ட அம் முதனூலைப் பொது நன்மை கருதித் தந்தருளிய ஸ்ரீல ஸ்ரீ மகா சந்நிதானத்தின் வண்மையும் நன்றியும் சென்று தேய்ந்திருது என்றுமென்னுள்ளத்து நின்று நிலவு நீர்மையே.

"அருச்சனைப் படலத்தில் 'தாடகை மானங் காப்பான்' என்ற செய்யுளில் தாடகை யென்பாள் யாவள் என்று ஆராயாமல் சில உரையாசிரியர்கள் "பார்ப்பனப் பெண்" என்று எழுதி அச்சிட்டிருத்தலால் அதில் ஐயமுற்று அதனை நீக்குதற்குரிய திருப்பனந்தாட் டலபுராணத்தைக் கடிதமூலம் கேட்டுக்கொண்டபோது அதனை உடனே அனுப்பி உபகரித்த திருப்பனந்தாள் காசிமடாலய தருமகர்த்தர் ஸ்ரீல ஸ்ரீ சொக்கலிங்க சுவாமிகள் அரியதொரு நன்றியும், நண்பும், நல்லுணர்வும் ஊழிதோறூழி உள்ளும் எம்முள்ளம். சுவாமிகள் அத்துணையினமையாது அப்புராணத்தைப் பரிசோதித் தச்சிடுமாறும் அதற்கு வேண்டிய பொருள் உபகரிப்போம் என்றும் தெரிவித்திருக்கின்றார்கள்.

"ஏடுகள் பெற்றும் †ஒத்துப் பார்த்தற்கு ஒருவருமின்றிக் கவலையுற்றிருக்கும்போது அதனைப் பிறரால் அறிந்த மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனத்துத் தம்பிரான் ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் அங்கு நின்றும் சென்னையை

---

* திரு. பண்டிதரவர்கள் தமது ஆராய்ச்சிக்குத் தொகுத்து வைத்திருந்த நூல்களை யெல்லாம் ஒரு பெரிய மரப் பெட்டியில் அடைத்துப் பூட்டித் தம் நண்பர் தேசிகர் ஒருவர் வீட்டிலுள்ள ஓர் அறையில் வைத்து அந்த அறைக் கதவைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு வெளியூர்கட்குச் சென்று சில மாதங்கள் கழித்து வந்து பார்க்கையில் புத்தகங்களெல்லாம் செல்லால் அரிப்புண்டு மட்குவியலாகக் காணப்பட்டனவாம். இப்படி எத்தனை எத்தனை இடங்களில் எத்தனை எத்தனை நூல்கள் செல்லரிப்புண்டு ஒழிந்து போயிருத்தல் வேண்டும்.

† ஏடுகள் கிடைப்பினும் ஒத்துப் பார்த்தற்குத் தகுதியுடைய புலமையாளர் உதவி இல்லாவிடில் நூல்களைப் பதிப்பிப்பது எளிதான செயலாகாது. ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு பல நூல்களை ஆராய்ந்து அச்சிற் பதிப்பித்த டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் ஒத்துப் பார்த்தற்கு யார் யார் உதவிகளை எப்படி எப்படிப் பெற்றார்களோ என்பது எண்ணி எண்ணி வியத்தற்குரியதாகும்.

அடைந்து உடனுறைந்து ஒத்துப் பார்த்து உதவி புரிந்தமைக்கு யாம் செய்யுங் கைம்மாறு யாதெனின், என்றும் மறவாமை ஒன்றுமேயாம்''.

திருவிளையாடற் புராணத்தை யொட்டிச் செந்தமிழ் நூல்கட்கு ஆரிய மூலங் கற்பிக்கும் போலிக் கொள்கை பற்றி இங்கே ஆராய வேண்டியது முதன்மை.

திருவிளையாடற் புராணத்திலே கூறப்பெறும் திருவிளையாடல்களெல்லாம் நம் செந்தமிழ்ப் பாண்டி நாட்டிலே தமிழ் மக்களிடையே பேசியும் எழுதியும் நிகழ்த்திப் போந்தனவாகலான் இவ்வரலாறுகள் ஆரியத்தில் எழுதப்படு முன்பே தமிழில் இருவகை வழக்கினும் நன்கு பயின்றனவாதல் வேண்டும். அச் செந்தமிழ் நூல்களை ஒழித்துவிட்டு வடமொழியில் தமிழ்நாட்டில் நிகழ்ந்த திருவிளையாடற் கதைகளை வைத்துச் சில நூல்கள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஆகவேதான் பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்துக்கு முதனூல் 'வடமொழி ஆலாசிய மகாத்மியம்' என்றும், வேம்பத்தூரார் திருவிளையாடலுக்கு முதனூல் 'வடமொழி உத்தர மகா புராணம்' என்றும், திருவிளையாடற் கதைகளைக் கூறும் கடம்பவன புராணத்துக்கு முதனூல் 'வடமொழி நீபாரண்ய மகாத்மியம்' என்றும், சுந்தர பாண்டியத்துக்கு 'வடமொழிச் சுந்தர பாண்டியம்' என்றும் கூறப்படுகின்றன.

இங்ஙனமே தமிழ்நாட்டுத் திருத்தொண்டர் மாக்கதைக்கு முதனூல் 'உபமன்னிய பக்தவிலாசம்' என்றும், மெய்கண்டார் சிவஞான போதத்துக்கு ரௌரவ ஆகமம் என்றும் கூறப்படுகின்றன.

யாதானும் ஒரு தமிழ்நூல் ஆரியத்தினின்றும் மொழி பெயர்க்கப்பட்டதானல்மட்டும் யாவரும் ஒத்துக் கொள்ளத் தக்க பெருமை யுடையதாகும் என்ற போலிக் கொள்கை சில நூற்றுண்டுகட்கு முன்பிருந்த தமிழ்மக்கட்கு ஏற்பட்டமையே சில தமிழ் நூல்கட்கு ஆரிய மூலம் கற்பிக்கும் தீங்கான பழக்கம் ஏற்பட்டதென்பது உய்த்துணர்தற்குரியது.

நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் கழகப் பதிப்பாக வெளியிடத் தாம் பெருஞ்சொல் விளக்கனர் அ. மு. சரவண முதலியாரவர்களைத் துணைக்கமர்த்தி எழுதிய பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம் பதவுரை விளக்கவுரை பற்றிய குறிப்பு அடுத்த இதழில் வெளியிடப்பெறும்.

—வ. சுப்பையா.

# இறைமையில் இசைந்த வாழ்வு

[திரு. மா. சண்முகசுப்பிரமணியம்]

(சிலம்பு-௪௬. பரல்-௨. பக்கம் ௭அ இன் தொடர்ச்சி)

(10)

## இயற்கையின் இயல்பை ஆய்வது விஞ்ஞானம், அவ்வியல்பின் காரணத்தை ஓர்வது மெய்ஞ்ஞானம்

"ஐம்பூதங்கள் தோன்றிய விதம் இதுதான். முதலில் பரவெளியான ஆகாயம், ஆகாயத்திலிருந்து காற்று, காற்றிலிருந்து நெருப்பு, நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து நிலம். இவ்வாறுதானே, ஐம்பூதங்கள் தோன்றியுள்ளன? இது இயற்கையின் இயக்கந்தானே? இதில் இறைமைக்கு இடமேது?" என்று வினவுகின்றனர், இறையுணர்வு எய்தாத அறிவியலறிஞர்கள்.

ஆனால், ஆன்மவியல் ஞானிகள் இதிலே மனநிறைவு கொள்ளுவதில்லை. "முதலில் விசும்பும் (ஆகாயம்), அதன் பின் காற்றும், பிறகு நெருப்பும், அடுத்து நீரும், இறுதியில் நிலனும் தோன்றியது என்பது உண்மைதான். ஆனால், முதலில் தோன்றிய விசும்பு எவ்வாறு வந்தது? அந்த விசும்பிலிருந்து காற்றும், அதன்பின் பிற பூதங்களும் எப்படித் தோன்றின? அவை தோன்றியதற்குக் காரணம் என்ன?—இவ்வாறாக மெய்யுணர்வு நாடுவோர் மனத்திலே வினாக்கள் எழுகின்றன.

இயற்கைப் பொருள்களின் காரணத்தை மட்டுமே ஆய்கின்றது விஞ்ஞானம்; ஆனால், அக்காரணத்தின் காரணத்தை ஓர்கின்றது மெய்ஞ்ஞானம்.

முதலில் தோன்றிய விசும்பிற்குக் காரணமாக ஒன்று இருந்திருக்க வேண்டுமன்றோ? அக்காரணம் எது என்று தெரியவில்லை. அறிவியலாலும் அதைத் தெரிந்துகொள்ள இயலவில்லை. அந்த ஆதிகாரணத்தை இறைமை என்கின்றனர் மெய்யுணர்ந்தோர்.

அந்த மூலகாரணத்தை, "புராண காரண" என்று போற்றுகின்றனர் மெய்யடியார்கள்.

"போற்றி போற்றி புராண காரண" —(திருவாசகம்)

"போக்கு வரவற்ற பூரண காரணன்" —(திருமந்திரம்)

என்றும்,

"காரணக் கலை ஞானக் கடவுளே"
—(திருநாவுக்கரசர் - திருநள்ளாறு)

என்றும்,

"கருமமும் கரும பலனுமாகிய காரணன் தன்னை"
—(திருவாய்மொழி)

என்றும்,

" அண்டகோடிகளையுந் தன்னுள் வைத்து
அணுவினுக்கணுவான காரணத்தை"
—(குணங்குடி மஸ்தான் சாகிபு)

என்றும் இறைமையைக் "காரணன்" என்று போற்றி நின்றனர் மெய்யுணர்ந்தோர்.

"ஆதிபகவன் முதற்றே உலகு"

என்றும்,

"பொருளாகக் கண்டபொருள் எவைக்கும் முதற்
பொருளாகி... .........." —(தாயுமானவர்)

என்றும் கூறி, எல்லாப் பொருள்களுக்கும் முதற்பொருள் இறைமை என்று கண்டனர். முதற்பொருளை 'முதல் வித்து' என்று ஏத்துகின்றனர் மெய்யடியார்கள்:

"முதல் தனி வித்தேயோ! முழு மூவுலகாதிக்கெல்லாம்"
—(திருவாய்மொழி : 'கிளியே')

"முத்தனை முதற்சோதியை முக்கணப்பனை முதல் வித்தினை"
—(திருவாசகம் : 'சென்னிப்பத்து')

"உலகுக்கெல்லாம் வித்தவன்காண்" —(திருநாவுக்கரசர்)

இறைமைதான் வித்தாகின்றது, முளையாகின்றது, விளைவது மாகின்றது :

"வித்தாகி முளையாகி விளைவதாகி........"
—(இராமலிங்க அடிகள்)

"வித்தே அவ்வித்தின் முளையே" —(தாயுமானவர்)

***"வித்தினை விளைவாய விகிர்தனை"*** —(*திருநாவுக்கரசர்*)

ஐம்பூதங்கள், அண்டங்கள், உயிர்கள் அனைத்தும் முளைத்துள்ளனவெனில், அவை முளைப்பதற்கு வித்து வேண்டுமே? வித்து இன்றி முளை இல்லை; முளை வெளிப்படுவது வித்திலிருந்துதான், அஃதாவது வித்தேதான் முளைத்து வெளிப்படுகின்றது. எனவே, வித்தும் முளையும் வேறல்ல. இறைமையாகிய வித்தும் இயற்கையாகிய முளையும் வேறு வேறல்ல. ஆதலால்தான், இயற்கையையே இறைமையாகக்கொண்டு ஏத்துகின்றனர் அடியார்கள். இக்கருத்தினைத் தெளிவாக விளக்குகிறது இப்பாடல்:

*"வித்தினி லன்றி முளையில்லை அம்முளை*
*வித்தினி லன்றி வெளிப்படு மாறில்லை*
*வித்தும் முளையும் உடனன்றி வேறல்ல*
*அத்தன்மை யாகும் அரனெறி காணுமே"*

—(திருமந்திரம் - 1932)

"வித்து இன்றி ஏதும் விளைவது உண்டோ? இறையருளாகிய சித்து இன்றி நாங்கள் உண்டோ? என்று வினவுகிறது விஞ்ஞான முறையில் சிந்திக்கும் சீரியர் உள்ளம்:

*"வித்தன்றி யாதும் விளைவதுண்டோ நின்னருளாஞ்*
*சித்தன்றி யாங்களுண்டோ செப்பாய் பராபரமே"*

—(*தாயுமானவர்*)

இயற்கையைக் கண்டு அதற்கு மூலமான இறைமையைக் *'காரணன்'* என்றும் 'முதல் வித்தென்றும்' மெய்யுணர்ந்தோர் போற்றும் பொழுது, ஏன் இயற்கையின் நுட்பங்களை ஆய்ந்தறியும் அறிஞர்களில் சிலர் இயற்கையின் மூலம் பற்றி எண்ணுவதில்லை?

இந்த வினவிற்கான விடையே இறையுணர்வின்மை எதனால் உள்ளது என்பதற்கான விடையுமாகும்?

**இயற்கையை இணைத்துக் காணலும், அதில் இணைந்து காணலும்:**

ஓர் அழகான ஓவியம், இருபது அடி நீளமும் அகலமுங் கொண்ட திரையிலே பல வண்ணங்களால் தீட்டப்பட்ட அச்சித்திரம் சுவரொன்றிலே பொருத்தி வைக்கப்பட்டுள்ளது. அந்தச் சுவருக்கு மிக அருகிலே நின்றுகொண்டு ஓவியத் திரையைப் பார்க்கிருன் ஒருவன். அவன் கண்களுக்கும் ஓவியத் திரைக்கும் இடையில் ஓரடி வெளியே இருக்கின்றது. இப்

பொழுது அவன் கண்களுக்குத் தெரிவது என்ன? ஏதோ வண்ணக் கோடுகள் மட்டுமே அவனுக்குத் தெரிகின்றன. அவன் கண்கள் அளவில் அடங்கும் வண்ணத்திட்டுக்களையே அவன் காணுகின்றான். ஓவியத்தின் முழு வடிவம் அவனுக்குத் தெரியவில்லை. பிறகு, ஓவியச் சுவரினை விட்டு ஐம்பது அடி தூரம் தள்ளி வந்து ஓவியத்தை நோக்குகிறான். இப்பொழுது தான் ஓவியத்தின் முழு வடிவமும் அவனுக்குத் தெரிகின்றது. ஆடும் மயிலின் அழகிய தோற்றத்தினை அவன் அச்சித்திரத்திலே காணுகின்றான். தோகை விரித்தாடும் மயிலும், அருகே துள்ளிக் குதித்தோடும் மானும் அவன் கண்களைக் கவருகின்றன! பின்னணியான சோலைக் காட்சியின் தோற்றம் அவன் மனத்தை மயக்குகிறது! ஓவியத்தின் அழகு அவன் உள்ளத்தை உருக்குகிறது!

ஓவியச் சுவரை ஒட்டி அருகில் நின்று அதைக் கண்ட பொழுது அவன் கண்களுக்குத் தெரிந்தது ஓவியத்தின் மிகச் சிறிய பகுதிதான். அது ஒரு சிறு வண்ணத் திட்டாகவே அவன் கண்களுக்குப்பட்டது. ஓவியத்தின் முழு உருவம் அவனுக்குத் தெரியவில்லை. ஆனால், சிறிது அகன்று வந்து அதை முழுமையாகக் காணும் பொழுதுதான், ஓவியப் பொருளையும் அதன் அழகையும் அவன் கண்டுணர முடிந்தது.

இது போன்றே, இயற்கை என்ற ஓவியத்தை நாம் முழுதாகக் காணமுயலும் பொழுதுதான் அதன் எழிலும் ஏற்றமும் நமக்குத் தெரிகின்றன.

ஓவியத்தை முழுதாகக் காணும்பொழுது அதன் அழகு தெரிகின்றது; அந்த அழகுச் சித்திரத்தை ஆக்கியோனின் ஆற்றல் தெரிகின்றது. இயற்கை என்ற ஓவியத்தையும் முழுதாகக் காண முயலும்பொழுது தான் அதன் ஏற்றம் தெரிகின்றது; அந்த ஏற்றத்திற்குக் காரணமான இறைமை தெரிகின்றது.

இயற்கைப் பொருள்களில் ஒன்றை மட்டுமே ஆராயும் பொழுது இயற்கையின் முழுத்தோற்றம் தெரிவதில்லை. இயற்கையின் தனித்தனி விதிகளை அறிகிறோம். ஆனால், அவ்விதிகள் அனைத்திற்கும் அடிப்படையான, பொதுவான, நிலையை நாம் உணருவதில்லை. நாம் ஆராயும் பொருளின் தன்மையை நாம் அறிகின்றோம். அப்பொருளின் பின்னிற்கும் இறைமையை நாம் உணருவதில்லை. இதை இந் நூற்றாண்டுக் கவிஞர் நன்கு எடுத்துக் கூறுகின்றார்:

"............சகத்தெலாந் தொளைப்பாய்,
தன்பின் னிற்குந் தனிப்பரம் பொருளைக்
காணவே வருந்துவாய், காணெனிற் காணாய்;
சகத்தின் விதிகளைத் தனித்தனி அறிவாய்
பொதுநிலை அறிவாய், பொருளையும் காணாய்..."

—(பாரதியார்)

இயற்கையனைத்தையும் முழுதாகக் காணுவது மனிதனால் இயலாததாகும். பரவெளியிலே கதி தவறாமல் சுற்றிச் சுழன்று கொண்டே இருக்கும் பல்கோடி அண்டங்களனைத்தும் மனிதனின் ஐம்புலன்களுக்கு அப்பாற் பட்டவை. எனவே, இயற்கையனைத்தையும் இணைத்துக் காணும் முயற்சி இயலாத தொன்றாகும். இவ்வாறு, இணைத்துக் காண இயலாத இயற்கையின் ஏற்றமே இறையுணர்வினைத் தோற்று விக்கின்றது நம் உள்ளத்தில்.

இயற்கையனைத்தையும் இணைத்துக் காணும் முயற்சியில் முகிழ்ப்பதே இறையுணர்வு என்பதை அனுபவத்தால் உணர்ந்த ஞானிகள் கூறுகின்றனர்:

"அண்டபகி ரண்ட மனைத்தும் ஒரு படித்தாக்
கண்டவர் கண்ட திருக் காட்சியை"

—(தாயுமானவர்)

என்று கூறி இயற்கையின் ஏற்றமே இறையுணர்வின் தோற்றம் என்பதை விளக்குகின்றனர்.

"..................................
அறிவுறுமிவ் வண்டங்கள் அத்தனையும் அருள்
வெளியில் உறுசிறு அணுக்களாக
ஊடசைய அவ்வெளியில் நடுநின்று நடன
மிடும் ஒரு பெருங்கருணை யரசே
.... ............ .. .........."

—(இராமலிங்க அடிகள்)

பேரண்டங்களையெல்லாம் சிறு அணுக்களாகத் தன்னிடத்தே கொண்டுள்ள எல்லையற்ற பரவெளியில், எண்ணத்திற்கும் எட்டாத அப்பரவெளியில் இயங்கும் இணையற்ற ஆற்றலாக இறைமையைக் காணுகின்றனர், மெய்யுணர்ந்தோர்.

இயற்கையின் கோலத்தோடு அதன் காலத்தையும் இணைத்துக் காணுகின்றான் மனிதன்.

நாம் வாழும் பூமியின் வயது எத்தனையோ கோடி ஆண்டுகள் என்பார்கள். ஞாயிற்றின் வயதோ இதைவிடப் பல இலட்சம் மடங்கு என்பார்கள். எத்தனை கோடி ஆண்டுகளாக இவ்வுலகம் சுழலுகின்றது? மற்ற அண்டங்கள் சுழன்று கொண்டிருக்கின்றன? இன்னும் எத்தனை கோடி ஆண்டுகளுக்கு இவை யனைத்தும் இயங்கப் போகின்றனவோ?

இந்தக் காலவெள்ளத்தின் தொடக்கம் எது? முடிவு எது? தொடக்கமும் முடிவும் தெரிந்தால்தானே நடுக்காலம் எது என்று காண முடியும்? காலமாகவும், இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலத்திற்கும் காரணமாகவும், காரணத்தை யறியமுடியாத இயற்கைக் கோலமாகவும், இறைமையைப் போற்றுகிறது மெய்யுணர்வு.

> "*காலமே காலமொரு மூன்றுங் காட்டுங்*
> *காரணமே காரணகா ரியங் களில்லாக்*
> *கோலமே*" —(*தாயுமானவர்*)

எல்லையற்ற இயற்கைப் பரப்பு, கரையற்ற கால வெள்ளம் —இவ்வாறான இயற்கையின் கோலத்தையும் காலத்தையும் இணைத்து எண்ணும் இதயத்தில்தான் இறையுணர்வு பிறக்கின்றது.

இயற்கையனைத்தையும் இணைத்துக் காணும் இதயமும் இயற்கையோடு சேர்ந்ததுதானே? இயற்கையை விட்டுத் தனியாக இதயத்திற்கு இயக்கம் ஏது?

"அனைத்துமாய் நிற்கும் இறைமையை விட்டு நீங்கி நான் வேறாக நிற்பது இயலாது; இறைமையோடு இணைந்துள்ள நான் இறைமையை எண்ணிப்பார்ப்பது எவ்வாறு?" — என்று வினவுகிறது மெய்ஞ்ஞானம் பெற்ற உள்ளம்.

> "*அனைத்துமாய் நின்றாயே யான் வேறாய் நின்னை*
> *நினைக்குமா றெங்கே...........*" —(*தாயுமானவர்*)

எனவே, இயற்கையோடு தானும் இணைந்திருப்பதை உணருகின்றது இதயம். இயற்கையனைத்தையும் இணைத்துக் காணும் இதயம் இயற்கையனைத்தோடு இணைந்தும் காணுகிறது. இயற்கையை இணைத்துக் காணும்பொழுது இறையுணர்வு பெறும் இதயம், இயற்கையோடு இணைந்து காணும்பொழுது இறையுணர்வின் இன்பத்தைப் பெறுகின்றது. இயற்கையனைத்தையும் இணைத்துக் காணும்பொழுது நாம் பெறுவது இறையுணர்வு; இயற்கை யனைத்தோடும் இணைந்து காணும்பொழுது

நாம் பெறுவது இறையுணர்வின்பம். இயற்கையை இணைத்தும், இயற்கையோடு இணைந்தும் நாம் காணும்பொழுது இறையுணர்வும் இறையுணர்வின்பமும் நம் இதயத்தில் எழுகின்றன.

எனவே, இயற்கையை இயற்கையாகக் காணாமல் இறைமையாகக் கண்டு இன்பம் எய்தும் மெய்யுணர்ந்தோர் இயற்கையனைத்தையும் இணைத்தும், இயற்கையனைத்தோடும் இணைந்தும் அதைக் காணுகின்றனர்.

விரைவாக முன்னேறிவரும் இன்றைய விஞ்ஞானம் மனிதன் இயற்கையோடு இணைந்துள்ளதையும் இயற்கையின் ஒருமைப்பாட்டையும் ஒப்புக்கொள்ளும் நிலையை எய்தி வருகின்றது.

**இன்றைய அறிவியல் ஆன்மவியலை ஒட்டியே உள்ளது:**

மனிதன் இயற்கையோடு இணைந்துள்ளவன் என்ற மெய்ஞ்ஞான உணர்வு, இன்றைய விஞ்ஞானத்திலும் முகிழ்த்துள்ளது. இயற்கை வேறு, மனிதன் வேறு என்று விஞ்ஞானம் எண்ணியிருந்தகாலம் உண்டு. ஆனால், இன்றைய விஞ்ஞானம் இயற்கையையும் மனிதனையும் இணைத்தே காணுகிறது.

''மனிதன் இயற்கையைத் தன்னிலிருந்து வேறுபட்டதாகக் காணுவதில்லை. இதுவே விஞ்ஞானத்தின் அடிப்படை உண்மை'', என்று சர் ஜேம்ஸ் ஜீன்ஸ் (Sir James Jeans) என்ற புகழ்பெற்ற விஞ்ஞானி கூறுகின்றார்.*

''ஆன்மீகம் அருகியுள்ள நம் காலத்தில், சீரிய விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் மட்டுமே ஆழ்ந்த சமயச்சார்பு உடையவர்கள்'', என்பது ஆல்பர்ட் ஐன்ஸ்டின் என்ற தலை சிறந்த விஞ்ஞானியின் முடிவாகும்.†

விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் எவ்வாறு மெய்ஞ்ஞானச் சார்புடையோர் ஆகின்றனர்? அணுவைப் பிளந்து அதன்

---

* But now, Sir James Jeans tells us that the essence of science is that man no longer sees nature as something distinct from himself.''—Discovery of India by Nehru.

† In this materialistic age of ours the serious scientific workers are the only profoundly religious people''—Professor Albert Einstein

மகத்தான ஆற்றலைக் காணும் விஞ்ஞானி, அண்டங்களனைத்தையும் இணைத்துக் காணும் மெய்ஞ்ஞானியின் உணர்வையே பெறுகின்றான். இருவருமே இயற்கையில் இறைமையைக் காணுகின்றனர் !

கல்லினுக்குள் ஒளியைக் காணும்பொழுது, காலவெள்ளத்தின் தன்மையைக் காணும்பொழுது, அற்பமான புல்லிலே வயிரம் போன்ற ஆற்றலைக் காணும்பொழுது, பூதலத்தில் இறைமை வெளிப்படுகிறது என்கிறார் ஒரு ஞானக்கவி:

*கல்லினுக்குள் அறிவொளி காணுங்கால்,*
*காலவெள்ளத்திலே நிலை காணுங்கால்,*
*புல்லினில் வயிரப்படை காணுங்கால்,*
*பூதலத்தில் பராசக்தி தோன்றுமே!*

—(*பாரதியார்*)

ஆம்! கல்லினுக்குள் ஒளியையும், காலவெள்ளத்தின் நிலையையும், புல்லினில் வயிரப் படையையும் விஞ்ஞானி ஆய்ந்து காணுகின்றான். இயற்கைப் பொருள்களில் ஒன்றைப் பகுத்து ஆயும் விஞ்ஞானி, இயற்கைப் பொருள்களனைத்தையும் இணைத்துக் காணும் அனுபவத்தைப் பெறுகின்றான். இயற்கைப் பொருள்களில் அமைந்துள்ள ஆற்றலை அவன் காணும்பொழுது, இயற்கையில் அடங்கியுள்ள இறைமையை அவன் உணருகின்றான். ஆதலால் தான், இன்றைய விஞ்ஞானியே உண்மையான மெய்ஞ்ஞானி என்று ஆர்பர்ட் ஐன்ஸ்டின் கூறுகின்றார்.

## இயற்கையின் ஒருமைப்பாடு

உலகப் பொருள்களனைத்திலும் உறையும் உண்மைப் பொருளே இறைமை என்று கூறுவார்கள்.

"உலகமெலாம் தனி நிறைந்த....உண்மையாகி" என்று இறைமையைப் போற்றி, உலகத்து இயற்கையின் ஒருமைப்பாட்டை உணர்த்துகின்றனர் மெய்யுணர்ந்தோர். இந்த ஒருமைப்பாட்டை இன்றைய விஞ்ஞானமும் ஏற்றுக் கொள்ளுகிறது.

"அனைத்துப் பொருள்களுக்கும் அடிப்படைப் பொருள் ஒன்று என்ற கொள்கை பண்டைய நம்பிக்கையாகும். ஆனால், வரலாற்றிலே நம் தலைமுறையில்தான், இயற்கையின் ஒருமைப்பாடு என்பது ஆதாரமற்ற கொள்கையோ விருப்பால் எழும்

வேட்கையோ அன்று என்றும், தெளிவாக மெய்ப்பிக்கப்பட்ட விஞ்ஞானக் கொள்கை என்றும் கண்டுணர முடிந்தது.''— இவ்வாறு கார்ல் கே. டேரோ*என்ற புகழ்பெற்ற வேதியியல் விஞ்ஞானி கூறுகின்றார்.

''ஒன்று கண்டீர் உலகுக்கு உயிராவது'' என்ற மெய்ஞ் ஞானமும், ''இயற்கையின் ஒருமைப்பாடு'' என்ற விஞ்ஞான மும் புகட்டும் பொருள் ஒன்றுதானே ?

எனவே, விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் மாறுபட்டது என்ற நிலை இன்று மாறிவிட்டது. இன்றைய அறிவியல் ஆன்மவியலை ஒட்டியே நிற்கின்றது.

**இயற்கையோடு இணையவேண்டுமென்ற இயல்பான இதய வேட்கை :**

''மனித இயல்பு இரண்டு முரண்பட்ட கூறுபாடுகளைக் கொண்டது. ஒன்று, விலங்கின இயல்பு, மற்றொன்று ஆன்மீக இயல்பு. நுண்ணிய அணுப்பூச்சியிலிருந்து எல்லா விலங்கு களும் விலங்கின இயல்பை உடையன. ஆனால், ஆன்மீக இயல்பு மனிதனின் தனிச்சிறப்பாகும். மனிதனின் ஆன் மீகமே மற்ற விலங்குகளிலிருந்து அவனை வேறுபடுத்தி, உயர்த்துகின்றது. உயிர்கள், பருப்பொருள்கள் இவற்றை மட்டுமே கொண்டதன்று நாம் காணும் உலகம். இவ்வண் டத்திற்கு அப்பால் ஆன்மீக ஆற்றல் உள்ளது என்பதை நாம் அனுபவத்தால் அறிகின்றோம். அண்டத்திற்கு அப்பா லுள்ள இந்த ஆன்மீக ஆற்றலோடு தொடர்பு கொள்ள நாம் விழைகின்றோம். அதோடு இணைந்து இசைய வேண்டும் என்ற தேவையை நாம் உணருகின்றோம். இத்தேவையை நிறைவேற்றுவதற்கான தூண்டுதலே சமயம் என்பதாகும். இவ் வகையில் சமயம் என்பது மனிதனால் தவிர்க்க முடியாத தாகி விடுகிறது''—இவ்வாறு உலகப்புகழ் பெற்ற உலக வர லாற்று நூலை எழுதிய ஆங்கிலப் பேராசிரியர் ஆர்னல்ட் டாய்ன்பி (Arnold Toynbee) கூறுகின்றார்.

உலக வரலாறு எழுதிய மற்றொரு சீரிய சிந்தனையாளர் ஜவஹர்லால் நேரு. அவர் கூறுகிறார்:

''இந்த உலகத்தை நோக்கும் பொழுதெல்லாம், ஆழந் தெரியாத ஒன்றை, அறிவிற்கு அப்பாற்பட்ட புதிரான ஏதோ

---

* Karl K. Darrow - The Renaissance of Physics (New York) - Page 301.

ஒன்றை நான் உணருகின்றேன். அதை இயன்ற அளவு புரிந்து அதோடு இணைந்து அதை அனுபவிக்க வேண்டும் என்ற வேட்கை எனக்கு எழுதுகின்றது.''*

ஆர்னல்டு டாய்ன்பி, ஜவஹர்லால் நேரு இவர்கள் சமயச் சார்பு அற்றவர்கள். இன்றுள்ள மதங்கள் எதிலும் ஈடுபாடு இல்லாதவர்கள். ''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணும்'' மேன்மை நலமுடையவர்கள். இவர்கள் இயற்கையில் அமைந்துள்ள இனம் புரியாத ஆற்றலை உணருகின்றனர். அவ்வாற்றலிலே இணைந்து திளைக்க வேண்டுமென அவர்களுக்கு எழும் இயல்பான வேட்கையை எடுத்துக் கூறுகின்றனர்.

இந்த இயல்பான இதய வேட்கையின் எதிரொலியைத் தான்,

*''எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபகமாய்*
*உள்ள வொன்றை உள்ளபடி ஓரும்நாள் எந்நாளோ*
*...............................*
*எங்கெங்கு பார்த்தாலும் இன்புருவாய் நீக்கமின்றித்*
*தங்குந் தனிப்பொருளைச் சாரும்நாள் எந்நாளோ?''*

—(*தாயுமானவர்*)

என்ற மெய்ஞ்ஞானப் பாடல்களில் நாம் கேட்கின்றோம்.

இவ்வாறு, இயற்கையோடு இணைந்து நிற்கும் இறைமையில் இசைந்து இன்பமுற வேண்டும் என்ற ஆன்மீக வேட்கைதான், மானிடத்தின் உயர்தனிச் சிறப்பான இந்தப் பண்புதான், உண்மையான சமயவுணர்வு அல்லது இறையுணர்வு என்றால், ஆத்திகம் இது, நாத்திகம் இது என்று அறுதியிட்டுப் பேசுவதற்கு அடிப்படை ஏது?

---

*''தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி*
*முனிவி லாததோர் பொருளது கருதலும்*
*ஆறு கோடி மாயா சத்திகள்*
*வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின*
*ஆத்த மானார் அயலவர் கூடி*
*நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்''*

(*போற்றித் திருவகவல் 42-47*)

---

* The Discovery of India—Jawaharlal Nehru.

# சங்க இலக்கியத்தில் கருங்கால் வெண்குருகும், வெள்ளாங் குருகும் சிறுவெள்ளாங் குருகும்

## LARGE EGRET, MEDIUM EGRET AND LITTLE EGRET

[திரு. பி. எல். சாமி, பி.எஸ்ஸி.,]

சங்க இலக்கியத்தில் குருகு என்றழைக்கப்படும் பறவை எது என்பது முன்னரே ஒரு கட்டுரையில் விளக்கப்பட்டது. குருகு என்ற பெயர் சிறப்புப் பெயராக வழங்குங்கால் தனிப்பட்டதொரு பறவையைக் குறித்து வழங்கியதும் விளக்கப்பட்டது. 'கருங்கால் வெண்குருகு' என்ற அடைமொழியுடன் பல பாடல்களில் ஒரு குருகு வழங்கப்பட்டுள்ளது. வெள்ளாங் குருகு என்றும் வெண் குருகு என்றும் அழைக்கப்படும் பறவைகளும் சங்க இலக்கியத்தில் வருகின்றன. இவைகள் பறவை நூற்படி எவை என்பதை ஆராயவேண்டும். கருங்கால் வெண் குருகு என்ற பெயர் பல புலவர்களால் அப்படியே பல பாடல்களில் கையாளப்பட்டுள்ளது. ஆதலின் அப்பெயர் குருகினத்தில் ஒரு குறிப்பிட்ட பறவை வகையைக் குறிப்பிடுகின்றது என்பதை அறியலாம். கரிய காலையும் வெண்மை நிறத்தையும் இப்பறவையைத் தெரிந்து கொள்ளப் பயன்படுத்திய அறிகுறிகளாகக் (Diagnostic) கொள்ளலாம்.

> "வளைநீர் மேய்ந்து கிளைமுதற் செலீஇ
> வாப்பறை விரும்பினை ஆயினும் தூச்சிறை
> இரும்புலா அருந்துநின் கிளையொடு சிறிதிருந்து
> கருங்கால் வெண்குரு கெனவ கேண்மதி"
>
> (நற்றிணை. 54)

> "..............................................சகடம்
> மணல்மடுத் துரறும் ஓசை கழனிக்
> கருங்கால் வெண்குருகு வெரூஉம்
> இருங்கழிச் சேர்ப்பிற்றம் உறைவின் ஊர்க்கே"
>
> (நற்றிணை. 4)

> "இறவருந்தி யெழுந்த கருங்கால் வெண்குருகு
> வெண்குவட்டு அருஞ்சிறைத் தாஅய்க் கரைய"
>
> (நற்றிணை. 67

"கழிதேர்ந் தசைஇய கருங்கால் வெண்குரு
கடைகரைத் தாழைக் குழீஇப் பெருங்கடல்
உடைதிரை யொலியிற் றுஞ்சுந் துறைவ"
(குறுந்தொகை-303)

"கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குள மாயிற்றென் னிடைமுலை நிறைந்தே"
(குறுந்தொகை-325)

"கருங்கால் வெண்குருகு கனைதுயில் மடியும்
இடுகுதுறை அகன்கழி இனமீன் மாந்தி
ஓங்கிருங் குனிகோட் டிருஞ்சினை உறையும்"
(யாப்பருங்கல விருத்தி—மேற்கோள்)

"ஓதஞ் சென்ற உப்புடைச் செறுவில்
கொடுங்கழி மருங்கின் இரைவேட் டெழுந்த
கருங்கால் குருகின் கோளுய்ந்து போகிய
முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை
எறிதிரை தொகுத்த எக்கர் நெடுங்கோட்டுத்
துறுகடல் தலைய தோடுபொதி தாழை
வண்டுபடு வான்போது வெரூஉந்
துறைகெழு கொண்கன் துறந்தனன் எனவே."
(நற்றிணை. 211)

நற்றிணை உரையாசிரியரான பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் 211ஆம் பாடலுக்கு உரை கூறும்போது கருங்கால் வெண்குருகு என்பதற்கு 'நாரையின் பகுதியாகிய நெடலை, வக்கா முதலாயின, இவையே தாழம் மோத்தை போலிருப்பன' என்று சொல்லியிருப்பதைக் கவனிக்க வேண்டும். இவர் கூறிய பொருள் பழையதொரு மரபை ஒட்டி எழுதப்பட்டதாகத் தெரிகின்றது. பறவை நூலறிவோடு கருங்கால் வெண்குருகு எதுவென்று ஆராய்ந்தால் தற்காலம் பெரிய வெள்ளைக் கொக்கு என்றழைக்கப்படும் பறவையேயென்று தெரிகின்றது. இது பின்னத்தூர் நராயணசாமி அய்யர் சொல்லிய நெடலைக்கும் சிறிது பெரியதாகும். நெடலை என்று நாட்டு மக்களால் அழைக்கப்படுவது நடுத்தரமானதாகும். இதற்கும் சிறியதைச் சிறிய வெள்ளைக் கொக்கு என்று நாட்டுமக்கள் அழைக்கின்றனர். சிறிய வெள்ளைக் கொக்கைப் பார்க்குங்கால் இது நெடியதாகையால் நெடலை என்றழைத்தனர். இவை மூன்றும் தூய வெண்மையான சிறகுடைய ஒரே இனப்பறவை வகைகளாகும். கருங்கால் வெண்குருகைச் சங்கப்பாடல்களில் தனியே காணப்பட்டதாகவே கூறியுள்ளதைக் கூர்ந்து நோக்கவேண்டும்.

பறவை நூலறிஞர்கள் மற்ற இரண்டு வகைகளும் கூட்டமாகக் காணப்படுவதையும் கருங்கால் வெண்குருகு பெரும்பாலும் தனித்தே இயற்கையில் நீர் நிலைகளருகில் காணப்படுவதையும் கண்டு எழுதியுள்ளனர். ஆதலின் தனித்தே காணப்படும் (Solitary) கருங்காலையுடைய வெண்குருகு தற்காலம் நாட்டு மக்களால் குறிப்பிடப்பெறும் பெரிய வெள்ளைக் கொக்கே (Large egret) என்று கொள்ள வேண்டும். கருங்கால் வெண்குருகு தனியாகக் குளத்திலும், கழிகளிலும், உப்புடைப் பாத்தியிலும் காணப்பட்டதாகச் சங்க நூல்கள் கூறுகின்றன. சிலசமயங் களில் சிறு கூட்டமாகவும் காணப்படலாம். கருங்கால் வெண் குருகு கிளையுடன் மேய்ந்ததை நற்றிணையில் ஒரு பாடல் (54) குறிப்பிடுகின்றது. வெள்ளைக் கொக்கு என்று தற்காலம் கிராம மக்களால் அழைக்கப்பெறும் பறவை வகைகளையே சங்க நூல்கள் வெண்குருகு என்று அழைத்தன. கருங்கால் வெண்குருகு எதுவென்பது மேலே விளக்கப்பட்டது. சங்க நூல்களில் வெள்ளாங் குருகு, சிறுவெள்ளாங் குருகு என்ற இரு வெண்குருகு வகைகளும் சொல்லப்பட்டுள்ளது. வெண்குருகு இனத்திற்கு உடற்சிறகுகள் தூயவெள்ளையாக இருக்கும். வெண்குருகினத்தில் (Egrets) மிகநெடியதைக் கருங்கால் வெண்குருகு என்றும் நடுத்தரமான உயரமுடையதை வெள் ளாங்குருகு என்றும், சிறியதைச் சிறு வெள்ளாங்குருகு என்றும் சங்க நூல்கள் அழைக்கின்றன. ஐங்குறு நூற்றில் வெள்ளாங் குருகுப்பத்து என்ற தலைப்பில் வரும் பத்துப்பாடல்களிலும் முதல் இரண்டு வரிகள் "வெள்ளாங் குருகின் பிள்ளை செத் தெனக் காணிய சென்ற மடநடை நாரை" என்று ஒரே முறையாக உள்ளன. வெள்ளாங் குருகின் பிள்ளை இறந் ததைக் காணச்சென்ற நாரை என்று பொருள் கூறப்பட் டுள்ளது. ஆனால் செத்த என்ற சொல் சங்க இலக்கியத்தில் இறந்த என்ற பொருளுடன் ஆளப்பட்டதைக் காண்பது அரிது. செத்த என்ற சொல் போல என்ற பொருளுடன் வழங்கி யுள்ளது. பறவை நூலறிவோடு இந்த இயற்கைச் செய்தியை ஆராய்ந்தால் உரை எழுதினவர் கூறிய பொருள் பொருத்த மற்றதென்பது தெரிகின்றது. வெள்ளாங்குருகின் பிள்ளையைத் தன் பிள்ளையென்று கருதிக் காணச் சென்ற மடநாரை என்று பொருள்கொள்வது பொருத்தமாக இருக்கும். நாரையினப் பறவைகளும் வெள்ளாங்குருகு வகைகளும் ஒரே மரத்தில் ஒரே சூழலில் மிக நெருக்கமாகக் கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பது வழக்கமாகும். இதை வேடந்தாங்கலில் இன்றும் காணலாம். கூடுகள் மிக நெருங்கியிருப்பதால் வெள்ளாங்குருகின் குஞ்சை நாரை தன் குஞ்சு என்று மயங்கு

வது இயற்கையில் நடக்கக் கூடியதே. இங்கே உள்ளுறைப் பொருளும் மாறும். தலைவியின் பிள்ளையைப் பரத்தை கண்டு மயங்குவதும் இவனும் உன் பிள்ளைதான் என்று தலைவி கூறுவதும் சங்கப் பாடல்களில்வரும் செய்தியாகும். வெள்ளாங் குருகிற்குப் பிள்ளைகள் பலவே என்று ஒரு பாடல் கூறு கின்றது.

"வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
அவையினும் பலவே சிறுகருங் காக்கை
அவையினும் அவையினும் பலவே குவிமடல்
ஓங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூங்கணங் குரீஇக் கூட்டுவாழ் சினையே"
(தொல்காப்பியம்—பொருளதிகாரம் மேற்கோள்)

வெள்ளாங் குருகுகள் கூட்டமாக ஒரே மரத்தில், சூழலில் பல கூடுகள் கட்டி வாழ்வதால் வெள்ளாங் குருகு களுக்குப் பிள்ளைகள் பல காணப்படுவது இயற்கையே. இதை வேடந்தாங்கலில் பார்க்கலாம். சிறு கருங்காக்கை யெனப் படும் கடற் காக்கைகள் (Gulls) கூட்டம் கூட்டமாக வெளி நாடுகளிலிருந்து வந்து தமிழ்நாட்டுக் கடற்கரைக்கு வருவதால் வெள்ளாங் குருகின் பிள்ளைகளைவிடச் சிறுகருங் காக்கைகள் பலவே என்று கூறியது உண்மைச் செய்தியே யாகும். தூக்கணங் குருவிகள் ஒரே மரத்தில் பல கூடுகள் கட்டிக் குஞ்சு பொரிக்கும். ஒரே சூழலில் நிறையக் கூடுகள் கட்டுவதால் குஞ்சுகளும் நிறைய இருக்கும். ஆதலால் தூக்கணங் குருவி களின் கூடுகளில் வாழும் குஞ்சுகள் சிறுகருங் காக்கைக் கூட்டத்தை விட மிகவே என்று கூறப்பட்டுள்ளது. பறவை களின் குஞ்சுகளையும் கூட்டத்தையும் நன்கு ஆராய்ந்தே இந்தப் பாடல் பாடப்பெற்றுள்ளது.

"கருங்கோட்டுப் புன்னைக் குடக்குவாங்கு பெருஞ்சினை
விருந்தின் வெண்குருகு ஆர்ப்பின் ஆஅய்" (நற்றிணை 167)

"இனமீன் ஆர்ந்த வெண்குருகு மிதித்த
வறுநீர் நெய்தல் போல" (நற்றிணை. 183)

"கடிதிடி வெரீஇய கமஞ்சூல் வெண்குருகு
தீங்குலை வாழை வாங்குமடல் இராது
நெடுங்கால் மாஅத்துக் குறும்பறை பயிற்றுஞ்"
(அகம். 141)

"இலங்குபூங் கரும்பி னேர்கழை இருந்த
வெண்குருகு நரல வீசும்" (அகம். 13)

"வேப்புநனை யன்ன நெடுங்கண் ணீர்ஞெண்டு
இரைதேர் வெண்குருகு அஞ்சி அயலது" (அகம். 176)

வெண்குருகு மீனையும் இருவையும் நண்டையும் உண்டதாகக் கூறப்பட்டுள்ளது. வெண்குருகு என்ற பெயர் வெள்ளைக் கொக்கிற்குப் பொதுப் பெயராக வழங்கிற்று என்று கருதலாம். அடைமொழியற்ற குருகு என்ற பெயர் வண்டானத்தை— கூழைக்கடா என்ற பறவையைக் குறிக்குமென்பதை முன்னரே செல்வியில் விளக்கியுள்ளேன். குருகு சாம்பல் நிறமானது. அதனின்றும் பிரித்துக் கூறவே வெண்குருகு என்றும் வெள்ளாங் குருகு என்றும் சங்க நூல்களில் பாடியுள்ளனர். இதை யறியாது பிற்காலத்தில் குருகுகள் எல்லாம் வெண்மை யென்றும், வெண்மை நிறம் காரணமாகவே குருகு என்ற பெயர் வந்ததாகவும் கருதினர்.

சிறுவெள்ளாங் குருகை (Little Egret) ஒரு நற்றிணைப் பாடல் மிக அழகாக வர்ணித்துள்ளது.

"சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே
துறைபோ கறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே
யெம்மூர் வந்தெம் மொண்டுறை துழைஇச்
சினைக்கெளிற் றார்கையை யவரூர் பெயர்தி
யனையவன் பினையோ பெருமற வியையோ
ஆங்கட் டீம்புன லீங்கட் பரக்கும்
கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே." (நற்றிணை. 70)

சிறிய வெள்ளாங்குருகை விளித்து நன்றி மறவாமல் தலைவனுக்கு என்னுடைய நோயைச் சொல்வாயா என்று தலைவி கேட்பதாக அமைந்துள்ளது இந்த நற்றிணைப் பாடல். நீர்த்துறையில் அழுக்குப் போகத் துவைக்கப்பட்ட தூய வெள்ளையான துணிபோல வெள்ளை நிறம் மிளிரும் தூவியை யுடைய சிறிய வெள்ளாங்குருகே என்று கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. இங்குக் கூறிய உவமை மிகவும் அழகானது. பொருத்தமானது. இயற்கைச் செய்திகளை நுண்ணிதாக ஆராய்ந்து எழுதியுள்ள இக்கால அறிஞர் (M. Krishnan) இதே உவமையைச் சிறு வெள்ளாங் குருகின் நிறத்தை வர்ணிக்கும்போது பயன்படுத்தி யிருப்பது எண்ணி இன்புறத் தக்கது. மாட்டுக் கொக்கின் பழுப்பு கலந்த வெண்மை நிறத்தையும் சிறுவெள்ளாங் குருகின் தூய வெண்மை நிறத்தை

யும் வேறுபடுத்திக் கூறும்போது இந்த உவமையை விளக்கத்திற்குப் பயன்படுத்தி யிருக்கின்றார். (The white colour of the cattle egret is not the cold, dazzling white of the little egret and the mediam egret but some what warm yellowish white; This distinction may seem slight on paper but it is quite obvious in the field being *the difference between well laundered white clothes glisterring with just a squeeze or the last rinse* and the colour of old cream laid paper) இந்த அறிஞர் கூறியுள்ளது போலவே 'நிறங்கிளர் தூவி' (Dazzling) என்று கூறியதைக் கவனிக்க வேண்டும். சங்கநூற் புலவர்கள் இயற்கையிலிருந்து உவமைகளை எவ்வளவு நுண்மையாக, பட்டறிவோடு எடுத்தாண்டுள்ளனர் என்பது விளங்கும்.

வெள்ளாங் குருகுகளுக்குக் குஞ்சு பொரிக்கும் காலத்தில் அழகான, நுண்ணிதான, பனிக்கூட்டம் போன்ற வெண்மையான தூவிகள் (Diaphanous, lace like, filamentous plumes) தோன்றும். இந்தத் தூவிகள் காணப்படுவதாலே வெண்குருகை அதன்மேல் அசையும் கரும்பின் பூவிற்கும், வேழத்தின் பூவிற்கும் ஒப்பிட்டு ஐங்குறு நூற்றுப் பாடல்கள் கூறுகின்றன. குருகுபோல வெண்மை யென்று கூறும் வழக்குப் பின்னர்த் தோன்றியது. "குருகினும் வெளியோய் தேளத்துப், பருகுபாலன்னவென் சொல்லுந் தேனே" என்ற வரியைப் பேராசிரியர் மேற்கோளாகக் காட்டியுள்ளார். கச்சியிற் காக்கை கரிது, கொற்கையில் குருகு வெளிது என்று இரு பாடல்கள் கூறுகின்றன. இங்கெல்லாம் குருகு என்பதற்கு வெண்குருகு, வெள்ளாங் குருகு என்றே பொருள் கொள்ள வேண்டும். கொற்கைக் கடலோரத்தில் வெள்ளாங் குருகுகள் அக்காலத்தில் நிறைய இருந்திருக்கலாம். வெண்குருகை வெண்கூதாளப் பூவோடு ஒப்பிட்டு அகநானூறு கூறுகின்றது.

> "விசும்பு விசைத்தெழுந்த கூதளங் கோதையிற்
> பசுங்கால் வெண்குருகு வாப்பறை வளைஇ" (அகம். 273)

> "பைம்புதல் நளிசினைக் குருகிருந் தன்ன
> வண்பிணி யவிழ்ந்த வெண்கூ தாளத்து" (அகம். 178)

வெண் கூதாளப்பூ ஒளிவிடும் வெள்ளை நிறமாகக் காணப்படும். முறுக்கு அவிழ்ந்து மலரும் பூ வெண்குருகு இருந்தது போலத் தோன்றியதாகக் கூறியுள்ளது அழகிய உவமையாகும். இந்த வெண்கூதாளத்தைச் சிறுதாளி என்று தற்காலத்தில் அழைப்பர். பழைய அகராதிகளில் குருகுதாளி என்றழைக்கப் பெற்றுள்ளது. கூதளஞ் செடிக்குக் குருகுதாளி என்ற பெயர்

அதைக் குருகிற்கு ஒப்பிட்டுக் கூறும் சங்கநூல் வழக்கால் தோன்றி யிருக்கும். சங்க நூல்களில் குருகைக் கூதளம் பூவிற்கு ஒப்பிட்டுக் கூறியது வழக்காக மாறிப் பின்னர்க் குருகு தாளி என்ற பெயர் தோன்றியது என்று கருதலாம். இது போன்றே குருவி நாணலின்பூ (Arundo Donax) குருகுபோல இருப்பதாக ஐங்குறுநூறு கூறுவதைக் காணலாம்.

"புதன்மிசை நுடங்கும் வேழ வெண்பூ
விசும்பாடு குருகிற் றோன்று மூரன்" (ஐங்குறுநூறு. 17)

குருவிநாணல் என்று தற்காலம் அழைக்கப்படும் நாணல் சங்க காலத்தில் வேழம் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இதுவே கொறுக்காந் தட்டையாகும். இந்தக் குருவி நாணல் என்றபெயர் குருகு நாணல் என்று இருந்திருக்கலாம். பின்னர்க் குருவி நாணல் என்று மக்கள் வாயில் மருவி வழங்கிற்று என்று கொள்ளவேண்டும். கரும்பின் பூவையும், வேழத்தின் பூவையும் குருகிற்கு ஒப்பிட்டுக் கூறுவது சங்கநூல் வழக்காகும்.

முன்னர்க் காட்டப்பட்ட நற்றிணை 211ஆம் பாடலில் கருங்கால் குருகின் குத்துக்குத் தப்பித்த இருல்மீன் தாழையின் வெளிய பூவைக் கண்டு குருகென்று பயந்ததாகக் கூறியதைக் காணலாம். குருகையும் தாழையின் பூவையும் ஒப்பிட்டுக் கூறும் வழக்குப் பிற்கால நூல்களான தேவாரம், நாலாயிர திவ்வியப்பிரபந்தம், கல்லாடம் ஆகியவைகளிலும் காண்கிறோம். பிற்கால நூல்களில் சிலவகைக் குருகுகள் தாழைப் புதரில் வாழ்வதாகக் கூறுவதைக் காணலாம். 'தாழை வெண்பூக் குருகென மலரும்' என்று குறுந்தொகை (226) கூறியுள்ளது.

"முருகுவாய் முட்டாழை நீண்முகைபார்ப் பென்றே
குருகுவாய்ப் பெய்திரை கொள்ளா—துருகிமிக
இன்னு வெயில்சிற கான்மறைக்குஞ் சேர்ப்ப ! நீ"
(திணைமாலை நூற்—36)

"சேவன்மண் டலித்துச் சினையடை கிடக்குங்
கைதைவெண் குருகெழ மொய்திரை யுகளு
முளைகடற் சேர்ப்ப னளிவிடந் தணிப்ப"
(கல்லாடம். 92 : 12-14)

"மீனுண வுள்ளி யிருந்தவெண் குருகெனச்
சோறுநறை கான்ற கைதைய மலருங்"
(கல்லாடம். 21 : 17-18)

"பெடைக்குரு கணங்கின் விடுத்தவென் சினையொடு
காவலடை கிடக்கும் கைதையம் பொழிலே"
(கல்லாடம் 23 : 8-9)

'நெய்தற் குருகு தன் பிள்ளையென்றெண்ணி நெருங்கிச் சென்று கைதை மடல் புல்கு கழிப்பாலை' (106-1) என்று அப்பர் கூறுகின்றார். வெண்குருகு தன் பெடையென்று கருதித் தாழை வெண்மடலைப் புல்குவதாகச் சம்பந்தர் பாடியுள்ளார். தாழையின் நீண்ட முகை தன்னுடைய குஞ்சென்று குருகு கருதுவதாகத் திணைமாலை கூறுகின்றது. இந்த உவமையைக் கையாள்வதன் காரணம் சிலவகைக் குருகுகள் தாழைமரச் சூழலில் காணப்பட்டதாலே யாகும். பறவை நூலறிஞர்களும் சிலவகைக் குருகுகள் (Yellow bittern, Black bittern, Chestnut bittern) தாழைப் புதரில் கூடுகட்டுவதையும் பதுங்கி யிருப்பதையும் கூறியுள்ளார்கள். தாழையின் சூழ்நிலையிலேயே அடிக்கடி இந்தக் குருகுகள் காணப்பட்டதால் தாழை மடல் போலவும் தாழையின் மடல் பொதிந்த பூப்போலவும் இருந்தனவாக உவமிக்கப்பட்டன. மற்றும் இந்தவகைக் குருகுகள் தாழை முதலிய மரப் புதர்களில் இருக்கும்போது தங்களை மறைத்துக் கொள்ள வளைந்த கழுத்தை மேலே நீட்டி, மூக்கையும் நிமிர்த்தி விண்வெளியைப் பார்ப்பது மேலே உட்கார்ந்திருக்கும் வழக்கமுடையவை என்று பறவை நூலார் கண்டுள்ளனர். அப்படி அமர்ந்திருக்கும்போது கூர் முள்ளுடைய தாழை மடல்போலக் கண்ணுக்குத் தெரிவதால் மரத்தோடு மரமாய் மடலோடு மடலாய் மறைந்து விடுகின்றன என்று சலீம் அலி என்ற தலைசிறந்த பறவை நூலறிஞர் கூறியுள்ளார். (The chestnut bittern assumes attitude on gaurd with neck perpendicular and bill pointing skyward while the bird freezes making itself astonishingly inconspicuous among its reedy sorroundings) சங்கப் புலவர்கள் தாழைப் புதரில் இந்தவகைக் குருகுகளைக் காணமுடியாது ஏமாந்து பின்னர் நெருங்கிக் கண்டு இந்த உவமையைக் கண்டு பிடித்தனரோ என்று நினைக்க வேண்டியுள்ளது. இக்கால அறிஞர்கள் கண்ட ஒப்புமையையே சங்ககாலப் புலவர்கள் உவமையில் கற்பனையையும் கூட்டிப் பயன் படுத்தியிருப்பது எண்ணி மகிழத்தக்கது. இது சார்பாகப் பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் கூறிய விளக்கத்தையும் நினைவு கூரவேண்டும். தாழையின்பூ (ஆண்பூ) நெடலை, வக்கா போலிருப்பதாக விளக்கியுள்ளதைப் பார்க்கலாம். இந்த வக்கா (Night Heron) போன்ற பறவைகளே, அதற்கு நெருங்கிய இனமான பறவைகளே தாழைமரச் சூழலில் வாழும் சிலவகைக் குருகுகளாகும். இதில்

ஒருவகையைக் கைதைக் கொக்கு என்று மலையாளத்தில் அழைக்கின்றனர். இந்த மலையாளப் பெயர் கல்லாடம் கூறும் கைதை வெண்குருகு போன்றுள்ளது. அப்பர் கூறிய நெய்தற் குருகும் இந்தவகைக் குருகே என்று கொள்ள வேண்டும். தாழை மடலில் வாழ்வதாகக் கூறும் குருகுகள் மூன்றுவகை உள்ளன என்பதையும் அறியவேண்டும். இவைகளுக் கெல்லாம் குருகு என்ற பெயர் பொதுவாக வழங்கியுள்ளது. கைதைக்குருகு என்றும், நெய்தற்குருகு என்றும் பிரித்தும் இருவகை காட்டப் பட்டுள்ளது. 'செங்கால் நல்வெண்குருகு', 'பசுங்கால் கருவடிய குருகு' என்றும் தேவாரத்தில் குருகுகள் அழைக்கப் பட்டுள்ளன. குருகுகளின் கால்கள் குஞ்சு பொரிக்கும் காலத்தில் சிவப்பு நிறமாகவும் பசுமையாகவும் மாறுவதுண்டு. பசுங்காலும் கரிய அடியும் உடைய வெண்குருகு நெடலி எனப் படுவதாகும்.

கலைக்களஞ்சியத்தில் வெள்ளாங் குருகு என்பது சிறப்பாக 'Ibis' என்ற பறவை என்று கூறியிருப்பதைக் காணலாம். ஆனால் சங்கநூற செய்திகளை நன்கு ஆராய்ந்து பார்த்தால் அது தவறே என்று தெரிகின்றது. கலைக்களஞ்சியம் குறிப்பிடும் பறவையைத் தற்காலத்தில் வேடந்தாங்கலில் 'அரிவாள் மூக்கன்' என்றழைப்பர். இந்த வெள்ளை அரிவாள் மூக்கன் என்ற பறவைக்குத் தலை கருமையாகக் கழுத்துவரை இருக்கும். ஆதலின் முற்றிலும் வெண்மையாகக் கூறப்படும் வெண் குருகோ, வெள்ளாங் குருகோ இதுவாக இருக்க முடியாது. மற்றும் அரிவாள் மூக்கன் வகையில் முற்றிலும் கருமையான தொருவகையும் உள்ளது. இதைக் கலைக்களஞ்சியம் கருங் குருகு என்று கூறியுள்ளது. கருங்குருகு என்ற பெயர் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. இந்த அரிவாள் மூக்கன் பறவை வகைகளில் கரண்டியைப் போன்ற தட்டையான மூக்குள்ள பறவையும் வேடந்தாங்கலில் காணப்படுகின்றது. இதை அங்கே 'மண்வெட்டி வாயன்' என்றழைக்கின்றனர். ஆங்கிலத்தில் Spoon - billed ibis என்று கரண்டி மூக்குடைய தாகப் பெயர்சொல்லி அழைப்பர். கரண்டியின் பெயர் கரண்டம் என்று பிங்கலந்தை, திவாகர நிகண்டுகள் கூறுகின்றன. கரண்டி மூக்குள்ள இந்தக் கரண்டத்தைச் சீர்காழியில் மிகுந்து காணப்பட்டதாக அப்பர் கூறியுள்ளார்.

"கரண்டமலி தடம்பொய்கைக் காழியர் கோன்"
(தேவாரம் - அப்பர்- 283)

கரண்டி போன்ற அலகு இருப்பதை உணர்ந்த தமிழரும் பொருத்தமான பெயரை இந்தப் பறவைக்குத் தந்துள்ளனர்.

குருகு வேறு நாரை வேறு என்பதை உணராது சங்கப் பாடல்களுக்கு உரை கூறுங்கால் குருகை நாரையென்று கொள்ளுதல் வழக்கமாக உள்ளது. சங்க நூல்கள் குருகையும் நாரையையும் வேறுபடுத்தியே பாடியுள்ளன. குருகுப் பெயர்க்கு அடைமொழி கொடுத்துக் குருகின் வகைகளையும் கூறியுள்ளன. தூய வெள்ளையான வெண்குருகையும் சாம்பல் நிறமான நாரையையும் ஒரே பறவையாகக் கருத இடமில்லை. சங்க இலக்கியத்தில் வெண்குருகிலே மூன்று வகைகள் விளக்கப்பட்டுள்ளன. இவைகள் கருங்கால் வெண்குருகு; வெள்ளாங் குருகு, சிறுவெள்ளாங் குருகு (Large egret, Small egret, Little egrct) ஆகிய பறவைகளாகும். இவைகளை இந்தக் காலத்தில் நாட்டுமக்கள் பெரிய வெள்ளைக் கொக்கு, நெடலி, சிறிய வெள்ளைக் கொக்கு என்றழைக்கின்றனர்.

ஆங்கில மேற்கோள் கையாளப்பட்ட நூல்கள் :

1. Hand book of the birds of India and Pakistan by Salim Ali and S. Dillon Ridley. Volum I. (oxford University Press 1968.)

2. The Birds of Travancore and Cochin by Salim Ali - (Oxford Uuiversity Press).

பி. கு : சென்ற செந்தமிழ்ச் செல்வி யிதழில் வரைந்து காட்டப்பட்டுள்ள படம் குருகு என்று சங்க நூல்களில் அழைக்கப்படும் கூழைக்கடா என்ற பறவையின் படமாகும்.

---

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

(திருவாசகம்)

# உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

## துல்[1] (பொருந்தற் கருத்து வேர்ச்சொல்)

துல்—துல்லியம்=ஒப்பு. "அவனுக்கு இவன் துல்லியம்". (தத்துவப். அளவை. 3, உரை). 2. சரி. 'துல்லியமாய்ச் சொன்னான்' (உ. வ.). 3. ஒப்பக் கையெழுத்து 'அரசரின் துல்லியஞ் சார்த்தின நீட்டு' (நாஞ். வ.).

துல்—துலம்=1. ஒப்பு. 2. இருபுறமும் ஒத்த நிறை கோல். 3. துலாநிறை. 4. கனம்.

துல்—துலா=1. நிறைகோல். 2. ஏற்றம். 3. வண்டியின் ஏர்க்கால். 4. துலாக்கட்டை. 5. துலாவோரை. 6. தூண் மேலுள்ள போதிகையின்கீழ் வாழைப்பூ வடிவிலமைந்த அணியுறுப்பு. வ. துலா.

கைத்துலா=கையினால் ஒருவனே ஓலைப்பட்டையில் நீரிறைக்கும் சிறிய ஏற்றம். ஆளேறுந்துலா=பலர் குறுக்கு மரத்தில் ஏறிநின்று முன்னும் பின்னும் உலவ, கூந்தற் பனை யடியிற் குடைந்த சாலில் ஒருவன் நீரிறைக்கும் பெரிய ஏற்றம்.

துலா—துலாம்=1. நிறைகோல். 2. "நாஞ்சிலுந் துலாமு மேந்திய கையினன்" (சிலப். 22, 66). 3. துலாவோரை. (பிங்.). 4. துலா (ஐப்பசி) மாதம். 5. உத்தரக் கட்டை. 'செந்தனி மணித்துலாஞ் செறிந்த திண்சுவர்" (கம்பரா. நகரப். 30). 5. துலாக் கட்டை. 6. தூண் மேலுள்ள போதிகையின்கீழ் வாழைப்பூ வடிவிலமைந்த அணியுறுப்பு. (பெருங். உஞ்சைக். 37 : 102, உரை). 7. ஏற்றம். 8. நூறு பலம் அல்லது ஐந்து வீசை கொண்ட நிறை.

ம. துலாம். வ. துலா.

துல்—துலை=1. ஒப்பு. "தோல்வி துலையல்லார் கண்ணுங் கொளல்" (குறள். 986). 2. நிறைகோல். "ஞானமாத்துலை" (ஞானா. 31 : 11). 3. துலையோரை. "இடப மரிதுலை வான் கடகம்" (சிலப். 3 : 123, உரை). 4. துலைநிறைத் தானம். "மருவுந் துலையாதி யாமே வருகொடை" (சேதுபு. அனுமகுண். 8). 5. ஏற்றம். 6. நூறுபலங் கொண்ட நிறை. 7. கனம். துலை—வ. துலா.

துல்—துன். துன்னுதல்=1. பொருந்துதல். 2. அணுகுதல். "யாவருந் துன்னல் போகிய துணிவினோன்" (புறம். 23). 3. செறிதல். "துன்னிக் குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லாம்" (நாலடி. 167). 4. அடைதல். "துன்னருஞ் சீர்" (நாலடி. 226). 5. மேவுதல். "துன்னுமை வேண்டும் பிறன்கட் செயல்." (குறள். 316.). 6. தைத்தல்.

"நீயிங் குடுத்திய கந்தையைத் துன்னுவா ரிலையோ" (அருட்பா, i, காட்சிப்பெரு. 4).

துன்னார் = பகைவர். "தொல்லமருட் டுன்னாரைச் செற்றும்" (கம்பரா. சரபங்க. 26).

துன்னியார் = நண்பர். "மன்னர் திருவு மகளிர் எழி னலமுந் துன்னியார் துய்ப்பர்" (நாலடி. 167).

துன்னு = உடம்பிற் பொருந்திய தசை.

துன்னல் = தையல். "துன்னற் சிதாஅர் துவர நீக்கி" (பொருந 81). துன்னம் = தையல். "இழைவலந்த பஃறுன்னத்து" (புறம். 136).

துன்னர் = தையற்காரர். (பிங்). துன்னகாரர் = தையற்காரர். "துன்ன காரருந் தோலின் றுன்னரும்" (சிலப். 5 : 32).

துன் — துன்று. துன்றுதல் = 1. பொருந்துதல். "கொன்றைமதியமுங் கூவிள மத்தமுந் துன்றிய சென்னியர்" (திருவாச. 17 : 10). 2. நெருங்குதல். "துன்றுகரு நறுங் குஞ்சி" (கம்பரா. குகப். 28). 3. கிட்டுதல்.

துன்—தும்—துமல்—துவல். துவலுதல் = நிறைதல்.

துவல் — துவன்று. துவன்றுதல் = 1. நெருங்குதல். "வானம் வெளியறத் துவன்றி" (கம்பரா. நாகபா. 97). 2. கூடியிருத்தல். "ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி" (தொல். பொ. 192). 3. குவிதல். "அகன்கட் பாறைத் துவன்றி" (மலைபடு. 276).

துவன்று = நிறைவு. "துவன்று நிறைவாகும்" (தொல். 815).

துல்—துறு. துறுதல் = 1. நெருங்குதல். "துறு மலரவிழ் குழலாய்" (சிலப். 7 : 42). 2. அடைதல். "சோர் பொழு

தணிநகர் துறுகுவர்'' (கம்பரா. திருவவ. 132). 3. குவிதல். 4. கூடுதல். க. துறுகு (ɡ).

துறு—துறுமு. துறுமுதல்=நெருங்குதல். ''நறுமலர் துறுமி'' (பெருங். இலாவாண. 15 : 6).

துறுமு — துறும்பு. துறும்புதல் = நெருங்குதல். ''கொன்றையு நாகமுந் துறும்பு செஞ்சடை'' (தேவா. 370:5).

துறு—துறை=1. பலர் கூடுமிடம். 2. பலர் கூடிக் குளிக்கும் நீர்த்துறை. ''தண்புனற் றுருத்தியுந் தாழ்பூந் துறைகளும்'' (மணி. 1 : 65). 3. வண்ணார் கூடித் துவைக்கும் வண்ணான் துறை. ''துறைச் செல்லா ளூரவராடைகொண் டொலிக்குநின் புலைத்தி'' (கலித். 72 : 13). 4. கடற்றுறை. ''துறைவளர் நாட்டொடு'' (சீவக. 1618). 5. துறைநகர். 6. கல்விக் கடலின் துறைபோன்ற கலை அல்லது அறிவியல். 7. கலைப் பிரிவு அல்லது கல்விப் பகுதி. 8. பகுதி. ''வீரரா யவர் புரிவ தாண்மைத் துறையென லாயிற்றன்றே'' (கம்பரா.) 9. தமிழ்ப் பொருளிலக்கணத்தில் அகமும் புறமும் பற்றிய பொருட்கூறு. ''ஒண்டீந் தமிழின் துறைவாய் நுழைந் தனையோ'' (திருக்கோ. 20). 10. பொருட்டுறை பற்றி வரும் செய்யுள் வகை. 11. மூவகைப் பாவினத்துள் ஒன்று.

துறைபோதல்=1. ஒரு கல்வித் துறையில் முழுத் தேர்ச்சி பெறுதல். 2. எடுத்த கருமத்தில் வெற்றி பெறுதல். ''எண்ணியவை யெல்லாந் துறைபோத லொல்லுமோ'' (கலித். 67).

துறுகல்=1. திரண்ட கல், பாறை, ''வேழமிரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉம்'' (ஐங். 239). 2. குன்று ''துறுக லேறி'' (ஐங். 210).

துறு — துறுத்து (பி. வி.). துறுத்தல் = திணித்தல். ''வாயிலே சீரையைத் துறுத்து'' (ஈடு : 9 : 9 : 1).

ம. துறு, க. துறுகு, தெ. துறுகு (ɡ).

துல்—துள்—துண்—துணர்=1. கொத்து. 2. பூங் கொத்து. ''பொற்றுணர்த் தாமம்''. (கல்லா. 10). 3. குலை. ''சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழம்'' (ஐங். 214).

துணர்த்தல்=கொத்துடையதாதல். ''துணர்த்த பூந் தொடையலான்'' (கம்பரா. வேள்வி. 53).

துணர்தல் = திணிதல், திரளுதல், கொத்தாதல்.

"இருடுணர்ந் தனைய குஞ்சியன்" (சூளா. குமார. 6).

துணர்—துணரி = பூங்கொத்து. "துணரி ஞாழல் நறும் போது நஞ்சூழ் குழற்பெய்து" (திவ். பெரியதி. 9 : 3 : 5).

துண் = துணை = 1. ஒப்பு. "துணையற வறுத்துத் தூங்க நாற்றி" (திருமுரு. 237). 2. கூட்டு. 3. புணர்ச்சி. "முந் நாளல்லது துணையின்று கழியாது" (தொல். பொ. 122). 4. கூட்டாயிருப்ப—வன்—வள்—து. "நறுநுதலாள் நன்மைத் துணை" (நாலடி. 381). 5. இரட்டை. "துணைமீன் காட்சி யின்" (கல்லா. 5 : 27). 6. இரண்டு. "துணையடி". 7. உதவி புரிவோன். "நானோர் துணைகாணேன்" (திருவாச. 25 : 10). 8. உதவி. "தங்குமா பொருளுந் தருமமுந் துணையா" (கம்பரா. பால. நகரப். 6). 9. நண்பன். "தந் துணைக் குரைத்து நிற்பார்" (சீவக. 465). 10 கணவன். "தாழ்துணை துறந்தோர்" (சிலப். 4 : 13). 11 மனைவி. "துணையொடு வதிந்த தாதுண் பறவை" (அகம். 4). 12. உடன் பிறப்பு. "துணையின்றிச் சேறல் நன்றோ" (கம்பரா. கும்பகர்ண. 158). 13. அளவு. "விருந்தின் றுணைத் துணை" (குறள். 87). 14. வரை (இடைச்சொல்). "தங்கரும முற்றுந்துணை" (நாலடி. 231).

துணங்கை = முடக்கிய இருகைகளையும் விலாப்புடைகளில் ஒற்றியடித்துக் கொண்டு, அசைந்தாடும் ஒருவகைக் கூத்து. "பிணந்தின் வாயள் துணங்கை தூங்க" (திருமுரு. 56).

துண்—தூண் = திரண்ட கம்பம். "சிற்றில் நற்றூண் பற்றி" (புறம். 86). 2. பற்றுக்கோடு. "துன்பந் துடைத் தூன்றுந் தூண்". (குறள். 615). ம. தூண்.

பலபொருள்கள் அல்லது கூறுகள் ஒன்றாகப் பொருந்தும் போது அல்லது சேரும்போது திரட்சியுண்டாவதால், பொருந்தற் கருத்தில் திரட்சிக் கருத்துத் தோன்றிற்று. "சேரே திரட்சி" என்னுந் தொல்காப்பிய நூற்பாவை (846) நோக்குக.

தூண்—தூணம் = 1. பெருந்தூண். "பசும்பொற் றூணத்து" (மணி. 1 : 48). 2. பற்றுக் கோடு.

'அம்' பருமைப் பொருட் பின்னொட்டு.

எ - டு: நிலை—நிலையம், மதி—மதியம் = முழுநிலா.

தூணம்—வ. ஸ்தூணு.

தூண்—(தீண்)—தீண்டு. தீண்டுதல் = 1. தொடுதல். "எங்கோலந் தீண்ட லினி" (பு. வெ. 9 : 50). 2. பாம்பு கடித்தல். "பதுமையைப் பாம்பு தீண்டிற் றென்றலும்" (சீவக. 1273). 4. பற்றுதல். "தீப்பிணி தீண்ட லரிது" (குறள். 227).

ம. தீண்டுக.

தீண்டு—சீண்டு. சீண்டுதல் = ஒரு பெண்ணைத் தீண்டிக் குறும்பு செய்தல்.

தீண்டு—தீட்டு = 1. தாழ்ந்தவன் உயர்ந்தவனைத் தொடுவதால் ஏற்படும் தூய்மைக் குலைச்சல். 2. பிறப்பு, இறப்பு, மாதவிடாய் முதலியவற்றால் ஏற்படும் தூய்மைக்கேடு.

தீண்—தீட்பு = பிறரைத் தொட்டுத் தூய்மை குலைக்கத் தக்க இழிவு.

தீட்பு—தீழ்ப்பு = இழிவு, தீட்டு.

துண்—துடு—துடவை = தோட்டம். "தோன்றுத் துடவையி னிட்டனள் நீங்க" (மணி. 13 : 10). 2. சோலை (சூடா.). 3. விளைநிலம். "ஆத்தொழு வோடை துடவையுங் கிணறும்" (திவ். பெரியாழ். 5 : 1 : 5).

துள்—தொள்—தோள் = 1. திரண்ட மேற்கை. "சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி" (பெரும்பாண். 145). 2. கை. "தோளுற்றொரு தெய்வந் துணையாய்" (சீவக. 10).

"குன்றன்ன குவவுத் தோளான்", "எழுவுறழ் திணி தோளான்" என்னும் உவமைகளாலும்; தோள் கொட்டுதல், தோள்கொடுத்தல், தோள்மாற்றுதல் என்னும் வினைகளாலும்; தோட்கடகம், தோட்பட்டை என்னும் பெயர்களாலும்; தோள் என்பது மேற்கையே யென்றும், புயம் என்னும் வடசொல் ஓரளவு வழக்கூன்றவே தோள் என்னும் தென்சொல் ஒரு சிறிது வழக்கு வீழ்ந்ததென்றும், அறிந்து கொள்க.

தொள்—தொழு = 1. மாட்டு மந்தை. 2. மாட்டுக் கொட்டில். "ஏறு தொழூஉப் புகுத்தனர்" (கலித். 101).

3. பட்டி மாடுகளை அடைக்கும் இடம். 4. காட்டுவிலங்குகளை அடைக்குங் கூடு. "தொழுவினிற் புலியனுன்" (கம்பரா. மூலபல. 181).

தொழு—தொழுகு=மாட்டுத்தொழு (பிங்). தொழுதல்= கூடுதல். தொழு—தொழுதி=கூட்டம். "இரும்பிடித் தொழுதியொடு" (புறம். 44). 2. திரட்சி. "தொழுதிச் சிறகிற் றுயராற்றுவன." (சீவக. 1187).

தொழு—தொகு. ழ—க, போலித்திரிபு. ஒ. நோ: மழவு—மகவு, முழை—முகை.

தொகுதல்=1. கூடுதல். 2. நெருங்குதல். 3. அடுக்கி வருதல். "உம்மை தொக்க எனுவென் கிளவியும்" (தொல். சொல். 291). 4. ஒன்றுதல். 5. மொத்தமாதல். 6. சுருங் குதல். "தொகுபீலி கோலின" (கம்பரா. வனம்பு. 1). 7. ஒடுங்குதல். "அசுத்த தத்துவங்கள் தொகும் முதலில்" (கோயிற்பு. இரணிய வன்ம. 2). 8. மறைதல். "மெய்யுருபு தொகாஅ இறுதியான" (தொல். சொல். 105).

தொழுதி—தொகுதி=1. சேர்க்கை. வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்" (தொல். சொல். 33). 2. கூட்டம். "தெய்வப் பெயர்த் தொகுதி" (திவா.). "வினையின் றொகுதி பொறுத்தெனை யாண்டுகொள்" (திருவாச. 6 : 6). 3. சவை. (பிங்.) 4. மந்தை. 5. மொத்தவெண். "உம்மை யெண்ணு மெனவெ னெண்ணும்—தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே" (தொல். சொல். 289). 6. சொல்லின் அல்லது சொல்லுறுப்பின் மறைவு. "தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்" (தொல். எழுத். 132, உரை).

தொகு—தொகுப்பு=1. கூட்டம். "தொகுப்புறு சிறுவர்" (அருட்பா, vi, பிள்ளைப்பெரு. 32). 2. தொகை.

தொகுப்பு—தோப்பு=சோலை. (பிங்.) ம., தெ., க., து. தோப்பு.

தொகு—தொகை=1. சேர்க்கை. "உயர்திணைத் தொகை வயின்" (தொல். சொல். 90). 2. கூட்டம். "உன்னடியவர் தொகை நடுவே" (திருவாச. 44 : 1). 3. புலவர் கழகம். "மதுரைத் தொகையாக்கினுனும்" (தேவா. 1179 : 11). 4. உயிரிகளின் திரள். "புள்ளின் றொகை யொப்ப" (பு. வெ.

6 : 20). 5. கொத்து. "தொகைப் பிச்சம்" (கம்பரா. எதிர் கோட். 7). 6. மொத்தம். 7. எண்.

"ஏயி ஞகிய வெண்ணி னிறுதியும்
யாவயின் வரினும் தொகையின் றியலா"

(தொல். சொல். 292). 8. தொகுத்துக் கூறுகை.

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே"

(தொல். 1597). 9. சொல்லும் சொல்லுறுப்பும் மறைகை. "ஈற்று நின்றியலுந் தொகைவயிற் பிரிந்தே" (தொல். சொல். 78). 10. அறுவகைத் தொகைநிலைத் தொடர். "எல்லாத் தொகையு மொருசொன் னடைய" (தொல். சொல். 420). 11. பதினெண் மேற்கணக்கில் எட்டுத்தொகை. "அது தொகைகளினுங் கீழ்க் கணக்கினும் இம்முறை மயங்கிவரக் கோத்தவாறு காண்க." (தொல். பொ. 5, உரை).

தொள் — தொண் — தொண்ணை = பருமன். தொண்ணைத் தடி = பருந்தடி.

தொள் — தொடு. தொடுதல் = 1. தீண்டுதல். "தொடிற் சுடினல்லது" (குறள். 1159). 2. பொருந்துதல். 3. பிடித்தல். "தொட்ட மூவிலைச் சூலந் துளக்குவார்" (கந்தபு. வீரபத். 38). 4. எடுத்தல். "பதுமுகன் சிலை தொட்டானே" (சீவக. 1862). 5. செலுத்துதல். "கடுங்கணைக டம்மைத் தொட்டனன்" (கந்தபு. சூரபன்மன்வ. 191). 6. தொடங்குதல். "அன்றுதொட் டனங்கனே யாயினுன்" (கம்பரா. தாடகை. 1). "தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலுந் தெரியாது" (பழமொழி). 7. உண்டாதல். "பழிபாவமுந் தொடுமே" (விநாயக. பு. 77 : 35). 8. அடித்தல். 9. இயம் (பறை) இயக்குதல். "கலித்த வியவ ரியந்தொட் டன்ன" (மதுரைக். 304). 10. உள்ளத்தில் தொடுதல், நினைத்தல். "நின்பெரு முலை மூழ்கவென் னுளத்தினிற்ருெடா முன்" (கல்லா. 52 : 9). 11. தொட்டுச் சூளிடுதல். "தொட்டு விடுத்தே னவனை" (சீவக. 1876). 12. தொடுத்தல், செருப்பணிதல். "பாதஞ் சேரத்தொடு நீடுசெருப்பு" (பெரியபு. கண்ணப்ப. 62). 13. கட்டுதல். 14. மனைவிய ரல்லாரொடு கூடுதல். ம. தொடுக. து. துடுகு.

தொடு — தொடுப்பு = 1. தொடர்ந்திருக்கை, தொடர்ச்சி. 2. கட்டுகை, கட்டு. 3. கூட்டுறவு. 4. தொடுசு. 5. வைப்

பாளன் அல்லது வைப்பாட்டி. 6. தொடக்கம். 7. பழக்கம். 8. கட்டுக்கதை. 9. குறளை. 10. செருப்பு.

தொடு—தொடல்=தொடரி (சங்கிலி).

தொடல்—தொடலி=தொடரி.

தொடல்—தொடலை=1. மாலை. "தொடலைக் குறுந் தொடி" (குறள். 1135). 2. மணிமேகலை. "தொடலை யல்குற் றொடித்தோண் மகளிர்" (புறம். 339).

தொடு—தொடவு—தொடவல்=மாலை.

தொடு—தொடை=1. பூமாலை. (பிங்.) 2. முத்துமாலை. "முத்துத் தொடை" (பரிபா. 6 : 16). 3. பின்னுகை. "தொடையுறு வற்கலை யாடை" (கம்பரா. முதற்போ. 109). 4. கட்டு. 5. வில்லின் நாண். "தொடையை நிரம்ப வாங்கி விடாத முன்பே" (சீவக. 2320). யாழ் நரம்பு. 6. அம் பெய்கை. "செந்தொடை பிழையா வன்க ணுடவர்" (புறம். 3). 7. சந்து. "வணங்கு தொடைப் பொலிந்த வலிகெழு நோன்றாள்". 8. காலின் மேற்பகுதி. 9. மோனை யெதுகை முரணியைபளபெடை யென்னும் ஐவகைச் செய்யுள் தொடுப்பு.

> "மோனை எதுகை முரணே இயைபென
> நால்நெறி மரபின தொடைவகை என்ப." (தொல். 1345)
> "அளபெடை தலைப்பெய ஐந்து மாகும்." (ஷை 1346)

10. பாட்டு. 11. தொடர்ச்சி. "தாபதர் தொடைமறை முழக்கும்" (கல்லா. 39 : 10). 12. இடையறுமை. "தொடை விழி யிருலின் றேனும்" (கம்பரா. நாட்டுப். 9).

தொடு—தொடர். தொடர்தல்=1. பின் பற்று தல். "அவரை............அரக்கியர் தொடர்குவர்" (கம்பரா. ஊர்தேடு. 26). 2. இடையறுது வருதல். "தொடர்ந்த குவளைத் தூநெறி யடைச்சி" (பதிற்றுப். 27 : 2). 3. வித்தும் மரமும் போல ஒன்றனையொன்று இடையறுது மாறிமாறிப் பின் பற்றுதல். 4. வழக்குத் தொடர்தல். க. தொடர். தெ. தொடரு.

தொடர்=1. தொடர்ச்சி. 2. தொடரி (சங்கிலி). "தொடர்ப்படு ஞமலியின்" (புறம். 74). 3. கைகால் விலங்கு. "தொடர் சங்கிலிகை" (திவ். பெரியாழ். 1 : 7 : 1). 4. வரிசை. 5. சொற்றொடர். "தழுவு தொடரடுக் கெனவீ ரேழே" (நன். 152). 6. நட்பு. "நல்லார் தொடர்கை விடல்" (குறள். 450). 7. உறவு. 8. கொடிவழி. ம., க. தொடர்.

தொடர்—தொடர்ச்சி.

தொடர்—தொடர்பு=1. தொடர்ச்சி. 2. நட்பு. "கேள் போற் பகைவர் தொடர்பு" (குறள். 882). 3. உறவு. 4. இணைப்பு. 5. செய்யுள் (பிங்.).

தொடர்—தொடரி=1. மாமைவளையத் தொடர். 2. புலி தொடக்கி. 3. ஒருவகை முட்செடி.

தொடு—தொடங்கு. தொடங்குதல்=துவங்குதல்.

ம. துடங்ஙுக, க. தொடங்(க்)கு, து. தொடகுறி (g).

தொடங்கு—தொடக்கு. தொடக்குதல்=1. கட்டுதல். "நினைத் துன்பத்தாற் றொடக்கினேன்" (சீவக. 579). 2. அகப்படுத்துதல். "வினைபொருள் மங்கையர் முகத்தினும்........ சொல்லினுந் தொடக்கும்" (கல்லா. 62 : 28). 3. பொருத்துதல். 4. சிக்கிக் கொள்ளுதல். "சங்கந் துங்க விலைக்கதலிப் புதன்மீது தொடக்கி" (பெரியபு. ஆனாய. 4). 5. செருப்பணிதல். "பாதுகை திருவடி தொடக்கி" (விநாயகபு. 80 : 278).

தொடங்கு—துடங்கு. தொடக்கு—துடக்கு.

தொடக்கு=1. கட்டு. "படைச்சொற் பாசத் தொடக்குள் ளுறீஇ" (பெருங். மகத. 2 : 13). 2. ஆதனைக் கட்டும் பாசம். "தொடக்கெலா மறுத்தநற் சோதீ" (திருவாச. 37 : 10). 3. பற்று "தொடக்கறுத்தோர் சுற்றமே" (கம்பரா. சரபங். 27). 4. மாதவிடாய்த் தீட்டு. 5. குஞ்சம். "தொடக்கொடு தூக்கி" (சீவக. 1343). க. தொடக்கு.

தொடு—தொடுக்கு. தொடுக்குதல்=எளிதாக விலகுமாறு தொட்டுக் கொண்டிருத்தல். 'மரத்திற் கிளை தொடுக்கிக் கொண்டிருக்கிறது'. (உ. வ.).

தொடுக்கு—தொசுக்கு=தகாப் புணர்ச்சி, வைப்பு.

தொடு—தொடுசு=1. தொடர்ச்சி. 2. கூத்திவைப்பு. தெ. தொடுசு. தொடுசு—தொடிசு.

துடக்கு—துயக்கு. துயக்குதல்=கட்டுதல். "துயக்குமவ் வினையின் கழிவும்" (தணிகைப்பு. நந்தியுப. 110). ம. துயக்குக.

துயக்கு=1. கட்டு. "துயக்கறுத மயக்கிவை" (தேவா. 260 : 10). 2. ஆசை. "தொண்டையங் கனிவாய்ச் சீதை துயக்கினு லென்னைச் சுட்டாய்" (கம்பரா. பொழிலிறுத். 40).

(தொடரும்)

# இன்னிசைத் தமிழில் இறைவழிபாடு

செந்தமிழ் மக்கள் சீரிய வாழ்க்கைக்கு எழுத்தாலும் பேச்சாலும் வழிகாட்டிய மறைத்திரு மறைமலை யடிகளார் 'திருக்கோயில் வழிபாடு' பற்றி எழுதியுள்ள கருத்தினை முதற்கண் அறிவோம்.

சிவபிரான் கோயில்களில் வழிபாடு ஆற்றும் குருக்கள்மார் தமிழரினத்தைச் சேர்ந்தவர்களே. (அவர்கள் ஆரியப் பார்ப்பனர் அல்லர்).

திருக்கோயில்களுக்கு வந்த சிறப்பெல்லாம் எல்லாம்வல்ல இறைவனை நேர்முகமாகக் கண்ட சைவசமயாசாரியர்களால் தமிழில் திருப்பதிகங்கள் பாடப்பெற்றிருப்பது பற்றியேயாம்.

அங்ஙன மிருக்கவும் அத்தமிழ்க் குருக்கள்மார் தேவார திருவாசகச் செந்தமிழ் மந்திரங்களைக் கொண்டு இறைவனுக்கு வழிபாடு செய்யாமல் தமிழ்மக்களுக்குச் சிறிதும் புலனாகாத வடமொழிச் சொற்களை மந்திரங்களென உயர்த்துச் சொல்லி அவற்றைக்கொண்டே கோயில் வழிபாடு முழுதுஞ் செய்கின்றார்கள்.

தமிழர்களாகிய எங்களுக்குத் தொன்றுதொட்டுத் திருக்கோயில்களில் தேவார திருவாசகச் செந்தமிழ் மாமந்திரங்களைக் கொண்டு வழிபாடு செய்யாமல், எங்களுக்குப் புறம்பான, எங்களுக்குத் தெரியாத வடமொழியைக் கொண்டு ஏன் வழிபாடு செய்கின்றீர்கள் என்று கேட்பதற்கு ஆண்மையுடைய தமிழர் எவராவது முன்வருதல் வேண்டாவா ?

தெய்வத்தன்மை சிறிதுங் காணப்படாத வடமொழிச் சொற்களைக் கொணர்ந்து அவற்றை மந்திரங்களெனப் பெருமைப் படுத்திப் புனைந்து கூறி நுழைத்து, தேவார திருவாசகச் செந்தமிழ் மாமறைகளைச் 'சூத்திரப்பாட்டு' என்று இழித்துப் பேசுவதுங் கேட்கப்படுகின்றதே ! ஐயகோ ! ஈதென்ன கொடுமை !! பாருங்கள் !!!

—மறைமலையடிகள்.

தமிழ் ஆங்கிலம் வடமொழி ஆகிய மும்மொழிகளையும் நுட்பமாக ஆராய்ந்து பல்கலைப் புலமை பெற்ற மறைத்திரு மறைமலை யடிகளார் தமிழிலேதான் மலர்தூவி வழிபடவேண்டுமென்று அழுத்தந் திருத்தமாக மனம் நொந்து கூறியுள்ளார்களே ! வேறு விளக்கமுந் தேவையா ?

திருமுறை யாசிரியர்களும், இராமலிங்க வள்ளலார் உட்படப் பிற்கால அருளாளர்களும் தமிழ்மொழியில் தோய்ந்து அருட்டமிழ், இசைத்தமிழ், ஏழிசைத்தமிழ், கலைமலிந்ததமிழ், சந்தத்தமிழ், ஞானத்தமிழ், திருநெறித்தமிழ், தெய்வத்தமிழ், நலங்கொள்தமிழ், நன்மைபுரிதமிழ், பண்ணுருந்தமிழ், பாவுற்ற தமிழ், மறைவளருந்தமிழ் என்றெல்லாம் புகழ்ந்து தமிழ் இன்பத்தில் திளைத்துள்ளனர். திருஞானசம்பந்தர் தமிழை 'ஞானசம்பந்தன் தமிழ்' என்றும், தம்மையே 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்' என்றுங் கூறி இறுமாந்திருந்தனர்.

''தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை யழைத்ததும் எலும்பு பெண்ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்''

என்று பரஞ்சோதி முனிவர் பகர்ந்தது கொண்டு தண்டமிழ்ச் சொல்லாலேதான் அற்புதங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதும் பிறமொழிச் சொற்களால் அல்லவென்பதும் அங்கையின் நெல்லியெனத் தெளிவாகின்ற தன்றோ?

''கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ''

என்ற பரஞ்சோதி முனிவர் திருவாக்காலும் இறையனாரகப் பொருளுரையானும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவு (சிவ பெருமான்) ளும் குன்றமெறிந்த முருகவேளும் தலைச்சங்க மிருந்து தமிழாராய்ந்தார் என்பது புலனாகின்றதன்றோ? இங்ஙன மிருக்கவும் தமிழ்மொழிக்கு மந்திர சக்தி இல்லை என்பார் கூற்று மறுத்தொதுக்கற் பாலதன்றோ?

1838 ஆம் ஆண்டில் திருப்புகழ்ச் சுவாமிகள் என்கிற அருள்மிகு தண்டபாணி அடிகள் திருநெல்வேலியிற் பிறந்து முருகன் அருளால் 8 ஆவது அகவை முதல் சிவபெருமானைப் பற்றிப் பதிகங்களும், முருகனைப் பற்றிச் சந்தப் பாக்களும், மற்றும் பல்வேறு தெய்வங்களைப் பற்றிப் பல்வேறு பாவினங்களில் பனுவல்களுமாக 50,000 க்கு மேற்பட்ட செந்தமிழ்ப் பாடல்களைப் பாடி அவையனைத்தையும் தம் திருக்கையாலேயே ஓலைச்சுவடிகளில் முத்துப்போல் எழுதி 1898 ஆம் ஆண்டில் திருவாமாத்தூரில் சமாதி கூடினர். அருளார்ந்த சுவாமிகள் அடியவர் சூழ வேலாயுத பூசை செய்துகொண்டு பல திருப்பதி

கட்குஞ் செல்லுகையில் இராய வேலூரை யடைந்தனர். அங்கெழுந்தருளி யிருக்கும் முருகக் கடவுளுக்குப் பதிகம், திருப்புகழ் ஆகியன பாடி அரங்கேற்றினர். அப்பதியிலுள்ள அமுதலிங்கசாமி திருமடத்தில் தங்கியிருந்தனர். அங்ஙன மிருக்கும் நாளில் வடமொழிப் புலமையிற் சிறந்த வேதியர் ஒருவர் அடிகளாரின் தமிழ்ப் புலமையின்மீது அழுக்காறு எய்தி வடமொழியே உயர்ந்ததென்று கூறி அடிகளை வாதத்திற் கிழுத்தனர். அடிகளும் அதற்கிசைந்தனர்.

வேதியர்: வேதம் வடமொழியில் உள்ளது. அதனுல் வடமொழி உயர்ந்தது.

அடிகள்: வேதம் தமிழ்மொழியிலுமுண்டு. ஆயின் யாட்டை வதைத்து ஊனை உண்ணும்படி தமிழ்வேதம் கூற வில்லை.

இப்படியே வாதம் முன்னிரவு தொடங்கி விடியுமட்டும் நடைபெற்றது. பின்னர் இருதிறத்தாரும் திருவுளச் சீட்டுப் போட்டு உண்மைநிலை யறியலாமென்று ஒப்புக் கொண்டனர்.

1. 'தமிழே உயர்ச்சி', 2. 'வடமொழியே உயர்ச்சி', 3. 'இரண்டும் உயர்ச்சி' என்று சீட்டெழுதி வேலாயுதத்துக்கு முன் இட்டனர். அப்போது அங்கே வந்த கன்னிப் பெண்ணைக் கொண்டு ஒரு சீட்டை எடுக்குமாறு சொல்லினர். பலரும் வியக்குமாறு 'தமிழே உயர்ச்சி' என்ற சீட்டு எடுக்கப் பெற்றது. 'உமது வழிபாட்டுக்குரிய வேலாயுதம் ஆதலால் உமது கருத்துக் கேற்ப அருளியது' என்று சொல்லிச் சென் றனர் வேதியர். அடிகள் அச்சீட்டினைத் தங் கண்களில் ஒற்றி வாயிலிட்டு மென்று உண்டனர். அந்தச் சொல்லையே ஈற்றடி யாக வைத்துத் "தமிழே உயர்ச்சி யென்று சீட்டுக் கொடுத்த பெருமாளே'' என்று திருப்புகழ்ப் பாட்டு ஓதினர். பின்னர் 'தமிழலங்காரம்' என்னும் தெய்வப் பனுவலை ஓதித் தமிழின் தெய்வத் தன்மையை வியந்து விளக்கினர்.

'வண்ணத்தியல்பு' என்ற சந்த இலக்கண நூலில் "சந்தப் பாடலில் வடமொழிச் சொற்கள் சேரலாகா. சேரின் சந்த இயல்பு கெடும்'' என்று குறிப்பிடுகின்றுர். 'வடமொழி கலந் திடாத தமிழென விளங்கு பாடல்' என்று தமது திருப்புகழ்ப் பாடலொன்றிற் கூறுகின்றனர்.

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் 'தமிழலங் காரத்தை'ப் படித்துப் பார்த்து 'ஆயிரம் பாட்டானுலும்

தமிழைப் பற்றிப் பாடுவதற்குத் தாராளமாகப் பொருள் சுவாமிகட்கு வரும்' என்று புகழ்ந்துள்ளார்கள்.

அருள்மிகு தண்டபாணி சுவாமிகளைப்போல் பாம்பன் சுவாமிகள் என்கிற குமரகுருதாச சுவாமிகளும் வடமொழியினும் தமிழே உயர்ந்ததென்ற கருத்தினைத் தமது 'சேந்தன் செந்தமிழ்' என்ற நூலின் முகவுரையில் விளக்கியிருப்பதோடு 'அமைதி யைம்பது' என்னுஞ் சேந்தன் செந்தமிழ் நூலை யாத்து அதற்குத் தாமே உரையும் எழுதியுள்ளார்கள். வடசொல் ஒன்றுகூட நூலிலும் உரையிலும் கலக்கப் பெறவில்லை.

தென்மொழியே வடமொழியினும் சிறந்தது என்பதற்கும் தமிழே மந்திர சக்தி வாய்ந்தது என்பதற்கும் இவற்றைவிடச் சான்று வேறு என்ன வேண்டும்?

யான் பிறப்பதற்குமுன் காலமாகியுள்ள என் பெரிய அப்பா திரு. அழகப்ப பிள்ளை அவர்களைப் பற்றி என் அருமைத் தாயார் தெரிவித்த நிகழ்ச்சி யொன்றை இங்கே கூறுவது பொருத்தமாகும். அவர்களிடம் தமிழிலே எழுதப்பட்ட மந்திர ஏடு ஒன்று இருந்ததாம். அவர்கள் மந்திர சக்தியால் சிலர்க்கு ஏற்பட்ட பிணி, நச்சுக்கடி முதலியவற்றை நீக்கியுள்ளார்களாம். அவர்கள் ஒருநாள் வழிபாடு செய்துகொண்டிருந்தபோது நல்ல பாம்பொன்று படமெடுத்துக் கொண்டு வழிபாட்டறைக்கு வந்ததாம். உடனே பால் கொண்டுவரச் சொல்லி அதன்முன் வைக்கவே அது அப்பாலைப் பருகிவிட்டுச் சென்றுவிட்டதாம். இதனால் தமிழ் மொழிக்குரிய மந்திர சக்தி தெளிவாகின்றதன்றோ!

திருவாய்மொழி வியாக்கியானத்தால் பெறப்படும் உண்மையொன்றையும் இங்கே கூறுவது பொருத்தமாகும்.

தென்திசையில் வாழும் செந்தமிழ் பேசும் சீரிய மக்கள் ஈர நெஞ்சினராயும், வடதிசையில் வாழும் சமற்கிருதங்கற்ற ஆரிய மக்கள் முரணராயும் இருந்தனர் என்று பெரியவாச்சான் பிள்ளை எழுதிய திருமாலை வியாக்கியானத்தால் அறியக்கிடக்கின்றது. ''குடதிசைத் தலையை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி'' என்ற திருப்பாடலுக்கு எழுதிய வியாக்கியானத்தில் பின்வருமாறு எழுதுகிறார். ''வடதிசை பின்புகாட்டி-வடக்குத் திக்கு ஆரிய பூமியாகையாலே, சமற்கிருத முரணராய் ஆழ்வார்கள் ஈரச் சொல்லும் நடையாடாத தேசமாகையாலே அத்திக்கைத் திருத்தும்போது, பின்பழகெல்லாம் வேணுமென்றிருந்தார்''.

திருவரங்கநாதன் தெற்கு நோக்கியிருக்கிறுன். ஆகவே முதுகு வடக்குப் பக்கம் இருக்கும் என்பதை விளக்க வந்த பெரியவாச்சான் பிள்ளை "வடதிசையிலுள்ளார் சமற்கிருத முரணரான படியால் அவர்களுக்குத் திருமுக மண்டலத்தைக் காட்டி ஆட்கொள்ள விரும்பாது வடக்கே முதுகைக் காட்டித் தெற்கே நோக்கியிருக்கிறுன் திருவரங்கநாதன்" என்கிறுர்.

* இக் குறிப்பினைத் திரு மு. அருணுசலம் அவர்கள் எழுதிய 13 ஆம் நூற்றுண்டு தமிழ் இலக்கிய வரலாறு 307 ஆம் பக்கம் காண்க.

வடகாற்று (வாடை) துன்பந் தருவதும் தென்காற்று (தென்றல்) இன்பந் தருவதும் இயல்பாகவமைந்துள்ளன. அவ்வாறே தென்மொழியாளர் பண்பும் வடமொழியாளர் முரணும் அமைந்துள்ளன போலும்!

நால்வர் காலத்தில் வழிபடுவோர் தாமே பூவும் நீரும் கொண்டு போற்றிசைத்து வழிபாடு செய்ததாகத் திருமுறைகளிற் காணப்படும் நூற்றுக் கணக்கான தொடர்களில் ஒரு சிலவற்றை மட்டும் அடியிற் குறிப்பிடுகின்றேன்.

"காலம் பெற மலர் நீரவை தூவித் தொழுதேத்தும்
ஞாலம் புகழடியா ருடலுறு நோய் நலியவே".

"கடியார் மலர்புனல் கொண்டுதன் கழலே தொழுதேத்தும்
அடியார் தமக்கினியான்"

"பொன்னடியே பரவி நாளும் பூவோடு நீர்சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய் நெடுங்கள மேயவனே"

"நித்தலும் நியமஞ்செய்து நீர்மலர் தூவிச்
சித்தமொன்ற வல்லார்க் கருளுஞ் சிவன்கோயில்"

"பாடவல்ல நன்மைந்தரொடு பனிமலர் கொண்டு
போற்றி செய்"

"கோலமா மலரொடு தூபமும் சாந்தமுங் கொண்டு போற்றி"

"பூவும்நீரும் பலியுஞ் சுமந்து புகலூரையே
நாவினுலே நவின்றேத்த லோவார்" —திருஞானசம்பந்தர்.

"சலம் பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்"

"போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்"

"நறுமலர் நீருங்கொண்டு நாடொறு மேத்தி வாழ்த்தி"

"வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு
வைகல் மறவாது வாழ்த்தி ஏத்தி"

"ஆக்கையாற் பயனென் அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென்
ணுதஇவ் ஆக்கையாற் பயனென்" —திருநாவுக்கரசர்.

"குடமெடுத்து நீரும் பூவுங்கொண்டு
தொண்டர் ஏவல் செய்ய
நடமெடுத்தொன் ருடிப்பாடி நல்குவீர்"

"நறுமலர்ப் பூவும் நீரும் நாடொறும் வணங்குவார்க்கு
அறிவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே"

"தடங்கையால் மலர் தூய்த் தொழுவாரைத்
தன்னடிக்கே செல்லுமாறு வல்லானை" —சுந்தரர்.

"தவமே புரிந்திலன் தண்மலரிட்டு முட்டா திறைஞ்சேன்"

"பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன்"

"பரவுவாரவர் பாடு சென்றணைகிலேன் பன்மலர்
பறித்தேத்தேன்" —திருவாசகம்.

"தூவி நீரொடு பூவவை தொழுதேத்து
கையினராகி" —திருவிசைப்பா.

"துன்றுமலர் தூவித் தொழுமின் தொழுந்தொறும்
சென்று வெளிப்படும் தேவர்பிரானே"

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரியா நிற்கும்"

"சிறப்பொடு பூநீர் திருந்த முன் ஏந்தி
மறப்பின்றி யுன்னை வழிபடும் வண்ணம்"

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை" —திருமந்திரம்.

"நாமாலை சூடியும்நம் ஈசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்தன்பாய்"

"...வினை தீர்க்கும் திருவடிக்கீழ்
வாசநன் மாமலர் இட்டிறைஞ்சேன் என்றன் வாயதனல்"
— பதினொராந்திருமுறை.

*"நிலவுந் தண்புனலு மொளிர்நீள் சடையோன்*
*திருப்பாத மலர்கொண்டு போற்றிசைத்து"*

*"கைப் பூம்புனலு முகந்தாட்டிக்*
*கமழ்பூங்கொத்து மணிந்திறைஞ்சி*
*மைப்பூங் குவளைக் களத்தாரை*
*நாளும் வழிபட் டொழுகுமால்"*

—திருத்தொண்டர் புராணம்.

*"பச்சிலை இடுவார் பக்கமே மருவும்*
*பரமனே பசுபதியே"*

—திருவருட்பா.

மேலே குறிப்பிட்டுள்ள தொடர்களில் யாண்டும் குருக்கள் மார்களைக் கொண்டு அருச்சிப்பதாக இல்லை. வழிபடுவோரே பூவும் நீருங்கொண்டு போற்றிசைத்து அகங்குளிர முகமலர அருச்சித்ததாகவே வெள்ளிடைமலையென விளங்குகின்றது.

இங்ஙனமிருக்கையில் குருக்கள்மாரைக் கொண்டு வட மொழியில் நாமாவளி சொல்லி அருச்சிக்கிற வழக்கம் எப்போது ஏற்பட்ட தென்பது ஆராய்ச்சிக் குரியது.

சைவத்தைத் தழுவி வடநாட்டிலிருந்து வந்த பிராம ணர்கள் திருக்கோயில்களில் தமிழ்மக்கள் தமிழில் போற்றிசைப் பதுபோல் வடமொழி நாமாவளியைச் சொல்லிப் பூவும் நீருங் கொண்டு அருச்சித்திருக்கலாம் என்பது திருஞான சம்பந்தர்,

*"தம் மலரடி யொன்று அடியவர் பரவத்*
*தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழல் சேர"*

என்று அருளிய திருமொழியால் அறியலாகின்றது. நாளடைவில் அவ்வடமொழியாளர்கள் அரசிலே செல்வாக்குப் பெற்று வழிபடுவோர் அருச்சிப்பதை ஒழித்துக் கட்டிக் குருக்கள்மாரைக் கொண்டு வடமொழி நாமாவளியைப் புகுத்தி யிருக்க வேண்டும்.

குருக்கள்மார்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கட்குமேல் சமற்கிருதம் தெரியாது; அதனை முறையாகக் கற்றது மில்லை. நாமாவளியைத் தம் முன்னோரிடம் கேட்டு நெட்டுருப் பண்ணிக் கொண்டு பொருள் தெரியாமல் ஓதி வருகின்றனர். ஆகவே அருச்சிக்கும் குருக்களுக்கும் பொருள் தெரியாது; வழிபட வருவோர்க்கும் பொருள் தெரியாது. பொருள் தெரியாத ஒரு மொழியில் அருச்சனை செய்வதற்குத் தமிழ் மக்கள் இணங்குவது எத்துணை பேதைமைத்து!

இங்கே எனது இளமைக் காலத்தில் எனது ஊரில் நடந்த செய்தியைக் கூறுவது சுவைதருவதாகும்.

திருநெல்வேலியில் சைவ வேளாள மரபினர்க்கும், தொண்டை மண்டல முதலிமார்கட்கும், தச்சர் கருமான் ஆகிய மரபினர்க்கும் தனித்தனியே அவரவர்கள் மரபிலே இல்லச் சடங்குகளை நடத்துவதற்குக் குருக்கள்மார் உண்டு. சைவவேளாளர் மரபிலுள்ள குருக்கள் குருக்களையா என்றழைக்கப்பெறுவர். அவர்கள் சமற்கிருதம் கற்காமலே தமிழிலே வடமொழி மந்திரங்களை எழுதி வைத்துக் கொண்டு நெட்டுருச் செய்து சடங்குகளை நடத்துவர். அஃது எனக்கு வியப்பை விளைத்தது.

என் வீட்டிலே என் தந்தையார் நினைவுநாளை ஆண்டு தோறும் கொண்டாடுவதற்கு ஐயங்காரொருவர் வீட்டுக்குவந்து வடமொழி மந்திரஞ் சொல்லிச் சடங்கை நடத்திவந்தனர். எனக்குப் பதினைந்தகவை நிரம்பியதும் அறியாமையால் நடந்து வந்த மூட வழக்கத்தை நிறுத்திவிட்டேன்.

தமிழக வடபகுதிகளில் தென்பாண்டி நாட்டிலே குருக்களையா போன்றவர்களைத் தேசிகர் என்கின்றனர். அவர்களும் சமற்கிருதத்தை முறையாகக் கற்றவர்களில்லை. இல்லச் சடங்குகளைச் சமற்கிருதத்திலே நடத்தி வருகின்றனர்.

'நலங்கொள் தமிழ்', 'நன்மைபுரி தமிழ்' என்பனபோல் பழவேற்காட்டிலுள்ள பெருமாள் கோயில் பூசாரி ஒருவர் ஆங்கிலத்தை நலங்கொள் ஆங்கிலம் எனவும் நன்மைபுரி ஆங்கிலம் எனவுங் கருதி 31-1-1961 இல் அங்கே யானும் திரு. நல் முருகேச முதலியாரவர்களும், திரு ஆ. வெ. ஆவுடைநாயகம் பிள்ளையவர்களும் சென்றிருந்தபோது முதற்கண் ஒரு புத்தகத்திலிருந்து ஒரு பகுதியை ஆங்கிலத்திலே படித்து விட்டுப் பின் நாலாயிரத் திருப்பனுவலிலிருந்து புகழ்ப் பாக்களை ஓதினர். கற்பூர தீபங் காட்டியபின் "ஐயா, பூசாரியரே ஒரு புத்தகத்திலிருந்து ஆங்கிலப் பகுதியைப் படித்தீர்களே அஃது என்ன புத்தகம்?'' எனக் கேட்டேன். அது "ஜேம்சு ஆலன் எழுதிய "Book of Meditations for everyday in the year" என்ற புத்தகமாகும். அன்றைக்குரிய சிந்தனையைப் படித்தேன்'' என்றார். எங்கட்கு அது மிக்க வியப்பைத் தந்தது எனினும் எனக்குமட்டும் மட்டற்ற மகிழ்ச்சி தந்தது. அந்த நூலை யான் சில காலமாகத் தேடிவந்தேன். அந்த நூலின் தமிழாக்கம் 'நித்தியானு சந்தானம்' என்ற தலைப்பில் என்னிட

முள்ளது. அதன் உரைநடை நன்றுயில்லை. மூல ஆங்கில நூலைக் கொண்டு இனிய செந்தமிழ் நடையில் தமிழாக்கஞ் செய்து வெளியிட விரும்பினேன். அந்த நூலைப் பின்னர்ப் பெற்றுக் கொள்ளலாம் என்று சென்னைக்குத் திரும்பி யுள் ளேன். என் பக்கத்து வீட்டு நண்பர் இறையடி சேரவே அவர் திருமகன் தன் தந்தையார் தொகுத்து வைத்திருந்த நூல்களை விற்றுவிடக் கருதி நூற்பட்டியினைக் கொண்டு வந்து காட்டினான். அப்பட்டியிலே Daily Meditations இருப்பது தெரிந்து யான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அப்பட்டியிலுள்ள நூல்களை விலை கொடுத்து வாங்கினேன். பின் அதனை அமெரிக்கன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. கு. பரமசிவம், எம். ஏ., அவர்களைக் கொண்டு தமிழாக்கஞ் செய்து தரச் சொல்லி 'நாள்வழி நற்சிந்தனைகள்' என்ற தலைப்பிற் கழகவழி வெளி யிடலானேன்.

ஜேம்சு ஆலன், ஒரு சிந்தனையாளர். திருக்குறள், நால டியார் போன்று அவர் எழுதிய நூல்கள் ஒவ்வொன்றையும் போற்றிப் படித்தல் வேண்டுமென்பது எனது அவா. 1918இல் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனுர் உள்ளத்தை ஜேம்சு ஆலன் கவர்ந்துள்ளார் என்பதற்கு அவர்கள் தமிழாக்கஞ் செய்து வெளியிட்ட 'அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்', 'சாந்திக்கு மார்க்கம்' என்ற மூன்று நூல்களும் சான்றாகும்.

ஆலன் எழுதிய இருபது நூல்களையும் தேடித் தொகுத்துக் கழகவழி வெளியிட்டிருப்பதோடு சில நூல்களைத் தமிழாக்கஞ் செய்து வெளியிட்டிருக்கிறேன்.

இச்செய்தி எல்லோருக்கும் வியப்பும் உவகையும் தருவ தொன்றாகும் என்றே இங்கே கூறியுள்ளேன்.

வடமொழி அர்ச்சனை புகுத்தப்பட்ட காலம் எப்படி யிருத்தல் வேண்டுமென்பதை ஆராய்வது இன்றியமையாதது.

வேற்று மொழியரசு வந்த காலத்தில் வடமொழியாளர்கள் ஆதிக்கம் பெற்றுள்ளனர். தூய தமிழிலுள்ள ஊர்ப் பெயர் களையும், இறைவன் இறைவியர் பெயர்களையும் வடமொழியில் மாற்றியமைத்தார்கள். இல்லச் சடங்குகளையும் வடமொழியில் நடத்தத் திட்டமிட்டனர். சங்க இலக்கியங்கள் பயிலப் பெரு மலும் இருந்தன. தமிழிலுள்ள கலை நூல்களையெல்லாம் அழித்துவிட்டு அவற்றை வடமொழியில் எழுதிவைத்துக் கொண்டனர். வடவாரியக் கதைகளை நுழைத்தனர். தமிழர்

மரபுகளைக் கெடுத்தனர். அந்தக்காலத்தில் வாழ்ந்த புலவர்களும் தாம் எழுதுகிற நூல்கட்கு வடமொழி மூலம் கற்பிப்பதில் பெருமை கொண்டனர். தமிழ் நாட்டிலுள்ள உயிரினங்கட்கும் பொருள்கட்குமுரிய தூய தமிழ்ப் பெயர்களை நீக்கி வடமொழிப் பெயர்களை வைத்தனர். அதனால் நிகண்டுகளிங் ஒருபொருட் பல சொற்களில் தமிழல்லாத வடமொழிச் சொற்கள் புகுத்தப் பட்டன. பிற்கால இலக்கண நூல்களில் வடமொழி இலக்கண நூல்களிலுள்ள கருத்துக்களைப் புகுத்தினர். தமிழ்மொழி ஒன்று பலவாகப் பிரிந்தது. மறைமலையடிகள், பூரணலிங்கம் பிள்ளை, வேங்கடசாமி நாட்டார், அரசஞ் சண்முகனார், ஆறுமுக நாவலர், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் போன்ற பெரும் புலவர்களும் வடமொழிக் கலப்பால் தமிழுக்கு ஏற்பட்ட தீங்கினை உணராதிருந்தனர். நடத்திய இதழ்கள், எழுதிய கதைகள், நாடகங்கள், புதினங்கட்கு வடமொழிப் பெயர்களை இட்டனர். வடமொழி கலந்து எழுதுவதே சிறந்த நடை எனக் கருதினர். உண்ணும் உணவுப் பொருள்கட்கும் பண்டங் கட்கும் வடமொழிப் பெயர்களை வைத்தனர். தமிழ் மக்கள் தாம் பெற்ற பிள்ளைகட்கு வடமொழிப் பெயர்களை வைத்தனர். இன்னோரன்ன தீங்குகளை இழைப்பதற்கேற்பத் தமிழ் மக்கள் செவிடர்களாய், குருடர்களாய், தன்மான உணர்ச்சியற்றவர் களாய், ஊமையர்களாய் வாழ்ந்திருந்தனர்போலும். சங்க இலக் கியங்களைத் தேடிப் பதித்து வெளியிட்ட முதுபெரும் புலவர் டாக்டர் வே. சாமிநாதையரவர்கள் 'வடமொழிக் கலப்பால் தமிழ் மேன்மையுற்றது' என்று சொல்லும் அளவுக்குத் தமிழின் நிலை தாழ்வுற்றது. எனவே தமிழ் மக்கள் ஏமாந்திருந்த காலத்தில் வடமொழி அர்ச்சனை நுழைக்கப்பட்டதென்பதில் ஐயப்படுதற்கில்லை.

இனி எப்படித் தமிழ் அர்ச்சனையைக் கொண்டு வருவ தென்பதுபற்றிக் கருதுவோம்.

தமிழ் நாடெங்கணும் ஒரே வகையான மலர் வழிபாட்டு நூல்தான் இருத்தல் வேண்டும். பலநூல்கள் வரின் வட மொழி நாமாவளிபோல ஒரே படியாகக் கையாளப் பெறுமல் ஒழிந்துபோய்விடும். 1954இல் தமிழ் அர்ச்சனையைப்பற்றி அரசும் மக்களும் கருதாதபோது பிள்ளையார், முருகர், சிவன், உமை யம்மை, அம்பலவாணர், திருமால், திருமகள், கலைமகள் ஆகிய எட்டுத் தெய்வங்கட்கும் மலர் வழிபாட்டு நூல்கள் வெளியிட் டோம். அவற்றை அப்போது அறநிலைய ஆணையராகவிருந்த உயர்திரு தி. கா. சங்கரவடிவேல் பிள்ளையவர்களும் அவர் கட்குப்பின் வந்த ஆணையர் உயர்திரு அ. உத்தண்டராம

பிள்ளையவர்களும் ஒவ்வொன்றிலும் 20,000 படிகட்குமேல் வாங்கிப் பரப்பினர். ஆனால் கோவையை யடுத்த பேரூரைத் தவிர ஏனைய திருக்கோயில்களில் தமிழில் மலர் வழிபாடு நடைபெறவில்லை.

இப்போது தமிழால் தமிழுக்காக வந்த அரசு திருக் கோயில்களில் தமிழில் அர்ச்சனை நடைபெறுதல் வேண்டு மென்று வற்புறுத்தி வருகின்றனர். அதன்பேரில் பல கோயில் களில் தமிழில் அர்ச்சனை நடைபெறுகிறது.

தமிழ்நாடெங்கும் தமிழில் அர்ச்சனை நடைபெறுதற்குத் தமிழகவரசு செய்ய வேண்டியவை :

1. ஒரே வகையான மலர்வழிபாட்டு நூலையே பயன் படுத்துமாறு செய்தல்.

2. கோயில் குருக்கள்மார் தங்களைத் தமிழரென உணரு மாறு செய்தல்.

3. தமிழ்க் குருக்கள் எல்லோருக்கும் புரியக்கூடிய தமிழ் மொழியில் அர்ச்சனை செய்தால் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்பதை மெய்ப்பித்துக் காட்டுதல்.

4. கழகம் வெளியிட்டிருக்கிற போற்றித் தாள்களைத் திருக்கோயில்களில் கண்ணாடிச் சட்டம் போட்டு மாட்டச் செய்தல்.

5. நன்ருக அர்ச்சனை செய்துவரும் குருக்கள்மார்கட்குப் பரிசு அளித்தல்.

6. மலர் வழிபாட்டுப் போற்றித் தொடர்கட்கு எல் லோரும் எளிதாக ஓதக்கூடியபடி இனிய இசையமைத்து இசைத்தட்டிற் பதிவு செய்து சுப்ரபாதம்போல் பரப்புதல்.

---

## சிவபெருமான் மலர்வழிபாடு

*கழகம் வெளியிட்டுள்ள சிவபெருமான் மலர்வழிபாட்டு நூலில் அப்பர் பெருமான் அருளிய 108 போற்றிகளைக் கொண்ட 'போற்றித் திருத்தாண்டகம்' பதிக்கப் பெற்றிருக்கிறது.*

# கலித்தொகை உரையில் பெண்மையை இழிவுபடுத்தலா ?

[செஞ்சொற் கொண்டல்
புலவர். செ. சிங்காரவேலன் M.A., Dip, Ling
*அ. வ. அ. கல்லூரி, மாயூரம்*]

கலித்தொகையில், பாலைக்கலியில் 17ஆவது பாடல் ''அரும்பொருள் வேட்கையின்'' எனத் தொடங்கும் ஓர் இனிய பாடல் ஆகும். இந்தப் பாடலைத் தோழி கூற்றாகக் கொண்டு பொருள் எழுதுகின்றனர் நச்சினார்க்கினியர். ஆனால் இப் பாடலுள்,

''என்தோள் எழுதிய தொய்யிலும்'' என்று மூன்றாவது வரியில் வருகின்றது. இதைக் கொண்டு இதைத் தலைவியின் கூற்றாகவும் கொள்ளலாம். ஆனால், தலைவியின் உறுப்புக் களைத் தன் உறுப்புக்களாகத் தோழி கூறிக் கொள்ளலாம் என்றும் தொல்காப்பியர், பொருளியலில், கூறியுள்ள நூற்பாவின் படி இதைத் தோழியின் கூற்றாகவே கொண்டு, தலைவி தோளை 'என்தோள்' என்று கூறினாள் என்றும் கூறலாம். இப்படித் தான் நச்சினார்க்கினியரும் கொண்டுள்ளார் என்பது அவர் உரையான் விளங்குகின்றது. ''தாயத்தி னடையா வீயச் செல்லா, வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்படா, எம்மென வரூஉம் கிழமைத்தோற்றம், அல்லா வாயினும் புல்லுவ வுளவே'' இதனாற்றோழி தலைவிதோளை 'என்றோள்' என்றாள்—என்பது அவர் உரை. 'மென்றோள்' என்ற பாடமும் உண்டென்று அவரே காட்டியுள்ளார். அந்தப் பாடம் கொண்டால் இந்த விளக்கத்திற்கும் தேவையில்லை எனலாம்.

இனி, இக்கவிதையுள், தொல்காப்பியர் தலைவன் கூற்றுட் கூறும்,

*'' நாளது சின்மையும் இளமைய தருமையும்
தாளாண் பக்கமும் தகுதிய தமைதியும்
இன்மையது இளிவும் உடைமைய துயர்ச்சியும்
அன்பின தகலமும் அகற்சிய தருமையும்''*

ஆகிய எட்டினையும் தலைவன் கூறக் கேட்ட தோழி அவற் றைத் தலைவற்குக் கூறிச் செலவு அழுங்குவிக்கின்றாள் என்பது அவர் கருத்து. ஆனால், தலைவனால் கூறக்கேட்டு இவற்றை

எடுத்துரைப்பதாக இப்பாடலுள் ஒரு குறிப்பும் காணப்பெற வில்லை. ஆனால் இவ்வாறு நச்சினார்க்கினியர் எழுதுகின்றார். இதற்கு ''நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே'' என்ற தொல்காப்பியப் பொருளதிகார நூற்பா (44)வையும் விதியாக்கி யுள்ளார்.

தலைவியோ அல்லது தோழியோ இவற்றைக் கூறு வதாகவே பாட்டிற் காணப்பெறுகிறதே அன்றி, தலைவன் முன்னர்க் கூறியவற்றை எடுத்துரைப்பதாக ஒருகுறிப்புக்கூடக் காணப்பெறவில்லை என்பது நோக்கத் தக்கதாகும். 'நிகழ்ந்தது கூறி' என்ற தொல்காப்பியச் சொற்களுக்கு 'முன்னர்த் தலைவன்கண் நிகழ்ந்ததோர் நிகழ்ச்சி'யைப் பின்னர்த் தலைவியோ அன்றித் தோழியோ எடுத்துக் கூறி' என்று பொருள் கூறல் பொருத்தமே அன்றி, 'தலைவன்கண் நிகழ்ந்த கூற்றினைத் தலைவியும் தோழியும் கூறி' என்று கூறுவது பொருந்தாது. ஆனால் நச்சினார்க்கினியர், 'நிகழ்ந்தது நினைத்தற் கேதுவும் ஆகும்' என்ற இடத்து 'நிகழ்ச்சி' என்று எழுதியவர், இந்நூற்பாவில் 'கூற்று' என்று எழுதுவதுதான் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. இவ்வாறு நச்சினார்க்கினியர் எழுதுவதற்கு அடிப்படைக் காரணம் யாதெனில், இப்பாட்டிற் காணப்பெறும் 'நாளது சின்மை' முதலிய எட்டும் தலைவியோ அல்லது தோழியோ தாமே கூறினர் என்பது, அவர்கள் இருவரும் பெண்களாய் இருத்தலின் பொருந்தாது எனக் கருதுவதே ஆகும். நுட்ப மான பொருள் உணர்ச்சி உடைய கருத்துக்களைப் பெண்கள் தாமே வெளியிட்டனர் என்று கருதுவதற்குக் கூட அவருடைய உள்ளம் அஞ்சுகின்றது போலும். அதனாலேயே, முன் ஒரு கால் தலைவன கூறிய அவ் வெட்டினையும், மீண்டும் ஒருகால் தலைவன் பிரிய முற்பட்டபொழுது எடுத்துக் கூறி அவனைப் பிரிந்து செல்லாமல் இருக்கும்படி அழுங்குவித்தாள் என்ற கருத்தில் எழுதியுள்ளார். நச்சினார்க்கினியருடைய இக் கருத்து அவர் இப்பாட்டின் இறுதியில் வெளிப்படையாகவே எழுதுகின்ற பின்வரும் வரிகளான் தெளிவாகின்றது.

''இது பெண்டன்மைக்கேலா நுண்பொருளினைத் தலைவன் எதிர் நின்று உணர்த்துவான் செவ்வன் கூருது, தலைவன் பண்டு கூறிய சிலவற்றை வாங்கிக்கொண்டு கூறும் கூற்று.''

இந்தக் கருத்தை, நுட்பமான கருத்துக்கள் ஒரு பெண்ணின் வாயிலாக வெளிப்பட இயலாது என்ற கருததைக் கொண்டவர்

ஆதலின் அதற்கேற்பத் தம்முடைய பொருளதிகார நூற்பா விலும் இதே பாட்டை எடுத்துக் காட்டி யிருக்கின்ருர்.

இனி, இப்பாட்டின் பொருட் கூற்றினையும், முழுவடிவத் தையும் காணுதல் பயன்மிகு செயலாகும்:

“தலைவ! அரும்பொருள் தேடுகின்ற வேட்கையினுல் உள்ளம் உந்துகின்றது; அவ்வுந்தலால் பிரிந்து போய் இருத்தலை நினையாதே” என்று தொடங்குகின்ருள். இது பாட்டின் முதல் நிலை.

“நீ மிக விரும்பி என்னுடைய தோள்களில் எழுதிய தொய்யில் தருகின்ற அழகினையும், மார்பில் நின்னை வலியாக உடைய சுணங்கின் அழகினையும் கைவிடல் முடியுமா? நினைத்துக்காண்” எனக் கூறி நிறுத்துகின்ருள். இதனை இப்பாட்டின் இரண்டாம் நிலையாகக் கொள்ளலாம்.

“நீ நன்கு மதிக்கின்ற பொருளும் சென்றவர்கள் தத்தம் நிலைக்கேற்பக் காலம் நீட்டிப்ப நின்று தேடத்தக்கது; அன்றி இப்போதே சென்று முகந்து கொள்ள ஓரிடத்தே கிடவாது. பொருள் தேடப் போகாதிருந்தவர்கள் எல்லோரும் ஒரு வாற்ருன் உண்ணுது வாழ்தலும் இல்லை. இளமையினையும், இருதலையும் ஒத்த காமத்தையும் ஒரு சேரப் பெற்றவர்கள் செல்வத்தை விரும்புகின்ற தன்மை அச் செல்வத்திற்கும் இல்லை. இல்வாழ்க்கையாவது, தம்முடைய வாழ்நாளில், உள்ளே ஒரோவொரு கைகளினுல் தம்முள்ளே தழுவிக் கொண்டு, ஒரோவொரு கைகளாலே ஒன்றன் கூருகிய ஆடையை உடுத்திருப்பவரே யாயினும், பிரியாதிருப்பவர் களுடைய வாழ்க்கையே ஆகும்; ஆம், இந்த வாழ்க்கையே வாழ்க்கை. கழிந்த இளமை மீண்டு தருதற்கு அரியது” என்று முடிக்கின்ருள். இது பாட்டின் மூன்ரும் நிலை; முடி நிலை.

இவ்வரிய பாட்டின் சீரிய வடிவம் இதுவாகும்.

“அரும்பொருள் வேட்கையின் உள்ளம் துரப்பப்
பிரிந்துறை சூழாதி ஐய விரும்பிநீ
என்ருேள் எழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கும் நினைத்துக்காண்
சென்ருேர் முகப்பப் பொருளும் கிடவாது
ஒழிந்தவர் எல்லாரும் உண்ணுதும் செல்லார்

*இளமையும் காமமும் ஓராங்குப் பெற்ருர்*
*வளமை விழைதக்க துண்டோ உளநாள்*
*ஒரோஒகை தம்முள் தழீஇ ஒரோஒகை*
*ஒன்றன் கூறுடை உடுப்பவரே யாயினும்*
*ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை யரிதரோ*
*சென்ற இளமை தரற்கு.''* (பாலை - 17)

இதனை ஒரு முறை படித்தாலும், தலைவன் கூறிய மொழிகளை மீண்டும் எண்ணிக்கொண்டு தலைவியோ அல்லது நச்சினர்க்கினியர் கூற்றுப்படி தோழியோ கூறுவதாக ஒரு குறிப்பேனும் தென்படாமையை உணரலாம். ஆயின் அவர் கூறுவதற்குற்ற காரணம் வேறு யாதும் இல்லை; 'பெண்ணறிவு நுண்ணறி வில்லாதது' என்ற அவருடைய கொள்கையே இவ்வாறு அவரை எழுத வைத்துள்ளது என்று கொள்ளலாம். 'பெண்ணும் சிந்தித்து நோக்குங்கால் ஏன் உயர் கருத்துக்களை உரைக்க வியலாது?' ஆதலின் அவரது கொள்கை இவ்வழிச் சிந்தனைக்குத் துணை புரியாமை தெளிவு.

---

## கயிலைத் தருமபுர ஆதீனத் தலைவர் திருவடிப் பேறெய்தினர்

*திருக்கயிலா பரம்பரை தருமபுர ஆதீனத்தின் இருபத்தைந்தாவது பட்டமாக எழுந்தருளியிருந்த கயிலைக் குருமணி சுப்பிரமணிய ஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் தமது 59ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் பொருட்டுக் காசியம்பதிக்குச் சில கிழமைகட்கு முன் சென்றிருந்தனர். அங்கே அவர்கள் 10-11-71 இரவில் எதிர்பாராத வகையில் திடுமென வீடு பேறெய்திய செய்தி நேற்றிரவு செய்தி இதழால் அறிந்து ஆற்ருெணுத் துயரமடைந்தோம். நேற்று மாலை வானூர்தி வழிப் புனித வுடல் சென்னைக்குக் கொண்டுவரப்பெற்று மகிழுந்து வழித் தருமபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பெற்றது. இன்று சமாதியில் உரிய சடங்குகளுடன் இடப் பெற்றிருக்கும். அவர்கள் காலத்தில் திருமடத்தின் ஆட்சியிலுள்ள பெருங் கோயில்கள் பலவற்றிற்குத் திருப்பணி செய்வித்துக் குடமுழுக்கும் நடைபெற்றது. புலவர் பட்டம் பெற்றுச் சென்னையிலுள்ள தருமபுர ஆதீன பிரசார நிலையத்தின் பொறுப்பாளராகவும் மக்களோடு நெருங்கிப் பழகிச் சமயத் தொண்டு புரிந்தவர்களாகவும் இருந்த தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரானவர்கள் 12-11-71 வெள்ளிக்கிழமையன்று தருமபுர ஆதீனத்தின் 26ஆவது பட்டத்தில் திருவருட்டிரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் என்ற திருப்பெயருடன் அமர்ந்தருளிய இனிய செய்தி சைவ நன் மக்கட்கு மட்டற்ற மகிழ்ச்சி தருகின்றது. கயிலைக்குருமணியவர்கள் திருமடத்தின் அகத் தொண்டுகளை அளவு படுத்திக் கொண்டு புறத் தொண்டுகளை விரிவு படுத்தி உலகெலாம் சைவ மணங் கமழச் செய்தருளல் வேண்டுமென்பது எங்கள் அவா.*

# பத்தொன்பதாம் நூற்றுண்டுக் கிறிஸ்தவக் கம்பர் திரு. என்றி ஆல்பிரட் கிருஷ்ண பிள்ளை

[வீ. ஞானசிகாமணி, எம். ஏ.,

ஆய்வு மாணவர், தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.]

(பரல் க. ருச ஆம் பக்கத் தொடர்ச்சி)

**நட்பின்வழி நடத்தல் :**

முத்தைய பிள்ளையுடன் கிறிஸ்தவத்தைத் தழுவின தனகோடி ராஜா கிருஷ்ண பிள்ளையின் உயிர் நண்பர். ஒரு நாள் அவர் புலவரைச் சந்தித்து நான்கு நூல்களை அவரிடம் கொடுத்துச் சில அறிவுரைகளை வழங்கினுர். அவர் கொடுத்த நூல்கள் : 'இளமைப் பத்தி', 'ஆத்தும விசராந்தீர்த்தல்', 'இருதயக் காவல்', 'பரதேசியின் மோக்ஷ பிரயாணம்'. கடைசி நூல் புலவரின் ஆன்ம வாழ்விலும், இலக்கியப் படைப்பிலும் நிலையான ஓர் இடத்தைப் பெற்றது. தம் மன ஐயங்களைத் தம் நண்பரிடம் பலமுறை விவாதித்தார். ஒரு நாள் இரவு நெடுநேரம் கடவுள், இயேசுவின் மூலம் 'நீதி இரக்க சமரசம்' செய்ததனைக் குறித்து உரையாடினுர். அவ்வுரையாடலின் முடிவில் கிருஷ்ண பிள்ளை எழுதுகிருர் : "இந்த உண்மையைத் தேவாவியானவர் அன்றைக்கே என்னிருதயத்துக் குள்ளாக் கினுர். அன்றைக்கே கிறிஸ்து நாதரை அறிந்தேன். அன்றைக்கே கிறிஸ்தவனுக வேண்டுமென்று தீர்மானித்தேன். அன்றைக்கே ஞாபகார்த்தமாக ஒரு செய்யுள் எழுதி வைத்தேன். அது :

*"கருணையங் கடலே, அந்த காரமாம் வினையைப் போக்கும்*
*அருணனே அடியேற் காக ஆருயிர் விடுத்த தேவே*
*பொருணயந் தெரியாத் தீய புல்லிய னெனையாட் கொள்ளத்*
*தருணமென் னிதய நிற்கே சமர்ப்பணம் தரும மூர்த்தி"*

என்பது. இப்பாட்டினை அடுத்தே புலவர், 'தெய்வம் என் னிருதயத்தைத் திறந்தார். அவரைத் துதிக்க என் வாயைத் திறந்தேன்' என்று சொல்லுகிருர்.

**சென்னை வருகை : திருமுழுக்கு :**

குடும்பச் சூழல்களும் எதிர்பார்த்த சமுதாய எதிர்ப்பு களும் அவர் ஊரிலேயே திருமுழுக்குப்பெற ஏற்புடைத்தாக

இல்லை. எனவே தம் முப்பதாம் வயதில், 1857 இறுதியில் திருமுழுக்குப் பெறச் சென்னை நோக்கி வந்தார்.

சென்னையில் மறைத்திரு. பெர்சிவல் (ஆங்கிலத் தமிழ் அகராதி ஒன்றின் ஆசிரியர்) என்பவருடன் தொடர்பு கொண்டார். இவருடைய ஏற்பாட்டின்படி சென்னை மாநிலக் கல்லூரியில் சிறிது காலம் தமிழாசிரியராக இருந்தார். 1858ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ஆம் நாள் மைலாப்பூரிலுள்ள தூய தாமசு திருச்சபையில் திருமுழுக்குப் பெற்றார். என்றி ஆல்பிரட் கிருஷ்ண பிள்ளை என்று பெயர் சூட்டப்பெற்றார். பெர்சிவல், புலவர்க்குச் சென்னையில் ஒரு நல்ல வேலையும் கொடுத்து, குடும்பத்தாரையும் சென்னைக்கு வருவித்துக் கொண்டு சென்னையிலேயே வாழும்படி தூண்டினர். புலவர் தாம் சென்னை வந்த நோக்கத்தைக் கூறி, அந்நோக்கம் நிறைவடைந்தமையால் தாம் வீடு திரும்புவதாகச் சொல்லி நெல்லைக்குத் திரும்பினர்.

புலவர் பாளையங்கோட்டைக்கு வந்ததும் செய்தி அறிந்த அவர் துணைவியார் பிள்ளைகளுடன் தம் தாய்வீட்டிற்குச் சென்றுவிட்டார். ஒன்றரை ஆண்டு கழித்தே வீடு திரும்பினர். 1860ஆம் ஆண்டிற்குள் புலவரின் மனைவி மக்களுடன் தாயாரும் கிறிஸ்தவத்தைத் தழுவினர்.

**மனமாற்றத்திற்குப் பின்னர் :**

சற்று உயர்ந்த ஊதியத்துடன் மீண்டும் சாயர்புரம் பள்ளியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதரானர். 1875 வரையில் அங்குப் பணியாற்றினர். 1876 இல் சபை திருத்தொண்டர் சங்கத்தார் (C. M. S.) திருநெல்வேலியில் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தி, புலவர்க்குத் தமிழ்ப் பேராசிரியர் பதவியை மன முவந்து அளித்தனர். புலவரும் அதனை ஏற்றுக்கொண்டு, 1887 ஆம் ஆண்டில் திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்கும் வரையில் பணிபுரிந்தார் ; மகாராசர் கல்லூரியில் பேரா. சுந்தரம்பிள்ளை அவர்களின் அரிய நட்புக் கிடைத்தது. தம் உயிர் நண்பரான, இப்பொழுது டாக்டர் தனகோடி ராஜாவுக்கு உப்பு உற்பத்தித் தொழிலில் உதவும்படி, அவர் வேண்டுகோளை ஏற்று 1890இல் தமிழ்ப் பேராசிரியர் பதவியிலிருந்து நீங்கி குலசேகரன் பட்டினத்தை அடைந்தார். இத்தொழில் துறையில் ஈராண் டுகள் பணியாற்றிய பின்னர் 1892 இல் இதனினின்றும் நீங்கி, எஞ்சிய தம் வாழ்நாள் முழுவதும் சமய இலக்கியத் தொண்ட

ராக, பாளையங்கோட்டையில் இருந்த கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தில் தொண்டாற்றினர். ஏறத்தாழ முப்பத்தாறு ஆண்டுகள் கல்விக் கூடங்களில் தமிழாசிரியப் பணிபுரிந்த கிருஷ்ண பிள்ளை, மேலைநாட்டுத் திருத்தொண்டர் பலருக்குத் தமிழ் கற்பித்தார். 1900த்தில் பெப்ருவரி 3ஆம் நாள் இறைவனடி எய்தினர்.

* * * *

## எ. ஆ. கிருஷ்ண பிள்ளையின் தமிழ்த்தொண்டு

எ. ஆ. கிருஷ்ண பிள்ளை 73 ஆண்டுகள் பயன் நிறைந்த வாழ்வு நடாத்தினர். சில ஆண்டுகள் தவிரத் தம் வாழ்நாள் முழுவதையும் தமிழ் கற்பதிலும், கற்பிப்பதிலும், இலக்கியப் படைப்பிலுமே செலவழித்தார். இலக்கியத் தொண்டு அவர் குணப்படுதலுக்குப் பின்னரே தொடங்கியது. தமிழிலும் வட மொழியிலும் சிறந்த அறிஞராகத் திகழ்ந்ததுடன் தமிழில் தனி ஆற்றலுடன் நூல் யாக்கும் எழுத்தாளராக விளங்கினர். சமயச் சார்புடையனவும் சமயச் சார்பற்றனவுமான நூல்களைப் பாவிலும் உரைநடையிலும் படைத்துள்ளார். ஆனல், தம் செய்யுள் நூல்களினல்தாம் நாடறியப்பட்டவராக உள்ளார்.

### உரைநடை

**இலக்கணம் :**

திருநெல்வேலி திருச்சபை திருத்தொண்டர் சங்கத்தாரின் (C. M. S.) கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தபொழுது, உரை நடையில் எழுதப்பெற்ற தம் இலக்கண நூலான ''இலக்கண சூடாமணி''யின் முதற் பகுதியை 1883 இல் வெளியிட்டார். நூலின் முன்னுரையினல் அதன் இரண்டாம் பகுதி விரைவில் வெளியிடத் திட்டமிட்டிருப்பதாக அறிகிறோம்; ஆனல், அது வெளியிடப் பெற்றதாகக் குறிப்பெதுவும் கிடைத்திலது. எளிய உரைநடையில் எழுதப்பெற்ற இலக்கண நூல் ஒன்று மாணவர்க்கு இன்றியமையாத் தேவையாக இருந்ததை உணர்ந்த புலவர், வடசொற்கள் கலவாத இனிய, எளிய தமிழ் நடையில் நூலின் முதற் பகுதியை எழுத்தியல், சொல்லியல், தொடரியல் என்று மூன்று பிரிவுகளில் அமைத்து எழுதினர். எடுத்துக் காட்டிற்குக் கூட இதில் ஒரு செய்யுள் வரியும் கையாளப் பெறவில்லை. தொடக்கநிலை மாணவர்களுக்கும் மேல்நிலை மாணவர்களுக்கும் பயன்படும் முறையில் எழுதியுள்ளார்.

இந்நூலின் பழைய படிவம் ஒன்று எழும்பூரிலுள்ள தமிழக அரசின் ஆவணக் காப்பகத்தின்கண் இருக்கின்றது. 1937இல் இந்நூல் இறுதியாகச் சில குறிப்பிடத்தக்க மாறுதல்களுடன் புலவரின் பேரன் தாஸ் கிருஷ்ணையா என்பவரால் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டது.

**தன் வரலாறு :**

மறைத்திரு. டி. உவாக்கர் திருத்தொண்டரின் வேண்டுகோளுக்கிணங்கிப் புலவர், 1893இல் தாமே தாம் கிறிஸ்தவரான வரலாற்றினைச் சுருக்கமாக எழுதினார். இது தமிழில் இன்னும் கையெழுத்துப்படியாகவே இருக்கின்றது. வாழ்க்கை வரலாற்று இலக்கியம் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் ஒரு புதுச் சேர்க்கையாகும். இவ்வகை, தன் வரலாற்றைத் தானே எழுதுதல், பிறர் வாழ்க்கை வரலாற்றை எழுதுதல் என இருவகைப்படும். கிருஷ்ண பிள்ளை கிறிஸ்தவரான வரலாறு ஒரு முழுமையான வாழ்க்கை வரலாறாக இல்லை என்றாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரைநடையில் எழுதப்பெற்ற தன்வரலாற்றுக்கு ஒரு சான்றாக உள்ளது.

**இறையியல் நூல் :**

எ. ஆ. கிருஷ்ணபிள்ளையின் இறையியல் நூல் ''இரட்சணிய சமய நிர்ணயம்'' 1898 இல் அவர் மறைவுக்கு ஈராண்டுகளுக்கு முன்னர் வெளியிடப் பெற்றது. புலவர் பல்துறை அறிவும் முதிர்ந்த நிலையில் எழுதப்பெற்ற இந்நூல், சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்களுள் ஒன்றான ''சிவஞான சித்தியார்'' போக்கில் புறச்சமய மறுப்பும் தம் சமய நிலைநாட்டலும் அடங்கியதாக உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டு மணிப் பிரவாள நடையின் மிகுந்த செல்வாக்கு இந்நூலில் மிளிர்ந்துள்ளது. புலவரின் உரைநடை நூல்களுள் இது தலை சிறந்தது. இதன் இரண்டாம் பதிப்பு 1956 இல் வெளியிடப் பெற்றது.

**செய்யுள் :**

நமக்குக் கிடைத்துள்ள செய்திகளின் ஒளியால் கிருஷ்ண பிள்ளை செய்யுள் யாப்பதில்தான் தம் எழுத்துலக வாழ்வினைத் தொடங்கியதாக அறிகிறோம். அவர் யாத்த முதல் செய்யுள் பற்றி முன்னரே குறிப்பிடப்பெற்றது.

1868 இல் கிருஷ்ண பிள்ளையின் முதல் மகனுக்கு வயது நான்கு. இளமையிலிருந்தே. அவனுக்குக் கடவுள் பத்தி உண்டாவதற்கு உறுதுணையாகக் கிருஷ்ண பிள்ளை 45 சரணங்கள் அடங்கிய ''பால்ய பிரார்த்தனை''யைப் பாடினர். இது தான் அவருடைய முதல் நீண்ட செய்யுள் படைப்பு என்று டாக்டர் என்றி அட்சன் கூறுகின்றார். இது 'இரட்சணிய மனோகரத்தில்' முதல் பாடலாக அமைந்துள்ளது. இது தமிழ் எம். ஏ. மாணவர்களுக்குக் கிருஷ்ண பிள்ளையின் செய்யுளில் பாடப்பகுதியாக நீண்டகாலமாக வைக்கப்பெற்றிருந்தது.

**இரட்சணிய யாத்திரிகம் :**

புலவரின் இலக்கியப் பெரும்படைப்பு ''இரட்சணிய யாத்திரிகம்'' இந்த மணிமுடிப் படைப்பாகிய கிறிஸ்தவப் பெருங் காப்பியத்தை ஈந்தமையாலேயே கிருஷ்ண பிள்ளை அழியாப் புகழ் எய்தினர். இதன் முதற் பதிப்பை 1894 இல் தாமே வெளியிட்டார். இது ஐந்து பருவங்களாகப் பகுக்கப்பெற்று, நாற்பத்தேழு படலங்களில் மொத்தம் 3, 766 பாடல்களில் அமைய எழுதப்பெற்றுள்ளது.

''இரட்சணிய யாத்திரிகம் ''வழிநூல். இதன் மூலம் ஜாண் பன்னியனின் ''யாத்திரிகளின் முன்னேற்றம்'' (Pilgrim's Progress) என்ற நூலின் தமிழாக்கத்தின் முதற் பாகமும் புதிய ஏற்பாடுமாகும். இந்நூலுக்கு வடிவ மூலம் கம்பருடைய இராமாயணம். பாடல் வடிவ அமைப்புடன் நூலின் அமைப்பிலேயும் கம்பரைப் பெரிதும் பின்பற்றுகிறார். காட்டாக, கம்பராமாயணத்தில் ஆரண்ய காண்டம், இரட்சணிய யாத்திரிகத்தில் 'ஆரண்ய பருவ' மாகிறது வால்மீகியின் வடமொழிக் காவியம் கம்பர் கரங்களில் ஓர் ஒப்பற்ற, தமிழ்க் காவியமானது போல் மேலைநாட்டு ஜாண் பன்னியனின் 'யாத்திரிகளின் முன்னேற்றம்' கிருஷ்ண பிள்ளையின் கரங்களில் ஓர் ஒப்பற்ற கிறிஸ்தவத் தமிழ்க் காவியமாயிற்று. கம்பரைப் போல் கடன் மடை திறந்தாற்போல் கவிபாடும் ஆற்றல்மிக்க கிருஷ்ண பிள்ளையை 'கிறிஸ்தவக் கம்பன்' எனல் மிகையாகாது. ஆசிரியத் தொழில், உப்பளம், வாணிபம் முதலிய தம்முடைய பல்வேறு அலுவல்களுக்கிடையில் இவர் இக்காவியத்தைப் பதினான்கு ஆண்டுகளில் பாடி முடித்தார்.

தமிழில் முதல் முத்தமிழ்க் காவியமாகிய சிலப்பதிகாரத்தின் சிறப்பியல்புகளுள் ஒன்று அதன் இடையிடையே ஏற்ற இடங்

களில் இசைப் பாடல்கள் அமைந்திருப்பது ஆகும். இச்சிறப்பு இரட்சணிய யாத்திரிகத்தின் இடையிடையே அமைந்துள்ள பதினொரு தேவாரப் பதிகங்களில் (புலவராலேயே இவ்வாறு அழைக்கப் பெறுகின்றன) காணக் கிடக்கின்றது. ஒவ்வொன் றிற்கும் அதனைப் பாடத்தக்க இசைப் பண்ணும் குறிக்கப் பெற் றுள்ளது. முத்தி நோக்கிச் செல்லும் ஆன்மாவின் பயண முன்னேற்றம் இக்காவியத்தின் கருத்துக் கருவூலமாகும். இதன் முதற்பகுதி (இரண்டு பருவங்கள்) உரைக் குறிப்புடன் 1958 இல் மூன்றும் பதிப்பாக வெளியிடப் பெற்றது. இரண்டாம் பகுதி இன்னும் வெளியிடப்பெறவில்லை. இது காறும் இக்காவியம் அகழ்ந்து ஆராயப் பெறவில்லை. இதில் ஆராய்ச்சிக்கு நிரம்ப இடம் இருக்கின்றது.

இரட்சணிய மனோகரம் :

சைவ வைணவ பத்தி இலக்கியக் கடலுள் மூழ்கித் திளைத் தவர் கிருஷ்ண பிள்ளை. பின்னர்த் தம் வாழ்க்கையில் இடம் பெற்ற கிறிஸ்தவ பத்திக்கும் ஆன்ம ஈடேற்ற அனுபவத்திற்கும் தம் பழைய பத்தி இலக்கியங்களின் வடிவில் உருக்கொடுத்தார். இதன் விளைவே 'இரட்சணிய மனோகரம்' என்ற பத்திப்பாடல் களின் தொகுப்பு. இரட்சணிய யாத்திரிகத்திலுள்ள பதினொரு தேவாரப் பதிகங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. 34 தலைப் புகளின் கீழ் 566 சரணங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. இஃது ஓர் அருமையான பத்தி இலக்கியமாகும். இதன் முதற் பதிப்பு புலவரால் 1899 இல் வெளியிடப் பெற்றது.

காவிய தரும சங்கிரகம் :

இஃது ஒரு பன்னூற்றிரட்டு. புலவர் இந்நூலுக்குக் காவிய தரும சங்கிரகம் என்று பேரிட்டுள்ளார். அவர் கூறும் பெயர்க் காரணம் : "நீதி சாஸ்திரங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட கவிகள் சில இப்புத்தகத்தின் இடையிடையே அதி சுலபமாகக் காணப்படுமாயினும் புராணாதி இதிகாசங்களிலிருந்து கிரகிக்கப் பட்ட கிரந்தமே பெரும் பான்மையுமாதலால் காவியதரும சங்கிரகமென்று பெயராயிற்று". இதன் இரண்டு பாகங்களுள் முதலாவது பள்ளியிறுதி வகுப்பு மாணவர்க் கென்றும் அடுத் தது முதல்நிலைக்கல்லூரி மாணவர்க்கென்றும் தொகுக்கப் பெற்றதாக ஆசிரியர் முன்னுரையால் அறிகிறோம். நமக்கு 1926 இல் வெளியிடப்பட்ட இதன் முதற் பகுதி மட்டும் கிடைத் துள்ளது. இரண்டாம் பகுதி வெளியிடப்பட்டதாகத் தெரிய வில்லை. பாடல்கள் எடுத்தாண்ட நூற்குறிப்புமின்றி, 513

பாடல்கள் 66 தலைப்புகளின்கீழ்த் திரட்டப்பட்டுள்ளது. மற்றும் ''காவிய தரும சங்கிரகம்'' என்ற தலைப்பில் 2500 பாடல்கள் திரட்டப்பட்டதாகவும் ஒரு குறிப்புக் கிடைக்கிறது. ஆனால் அவையெல்லாம் என்ன ஆயின என்று தெரியவில்லை.

**இரட்சணியக் குறள் :**

திருக்குறளைத் தழுவி, 'இரட்சணியக் குறள்' என்ற நூல் ஒன்று எழுதியதாக அறிகிறோம். இது வெளியிடப்பெறவில்லை. கையெழுத்துப் படியாகவே அழிந்துபோயிருக்க வேண்டும். திரு. வி. க. அவர்களின் 'கிறிஸ்து மொழிக் குறளை'ப் போன்றதாக இந்நூல் இருந்திருக்கலாம்.

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், 1958 இல் கிருஷ்ண பிள்ளையின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பெற்ற போது விடுத்த செய்தியில் கிருஷ்ண பிள்ளையின் தமிழ்த் தொண்டினால் தமிழ் இலக்கிய உலகம் அடைந்த பயனைப் பின்வருமாறு கூறுகின்றார் : ''கிருஷ்ண பிள்ளை தமிழ் மொழியின் தன்னிகரற்ற தனித்திறத்திற்கும் அதன் அடிப்படைப் பண்பாட்டிற்கும் ஏற்பக் கிறிஸ்தவத்தை நாட்டின் நயத்திற்குரியதாக்கியுள்ளார். இனி, தமிழ்க் கிறிஸ்தவர்கள் அவருடைய மொழியைக் குறித்தும், அதன் கருத்து வெளிப்பாட்டு வடிவ முறைகளைக் குறித்தும், அதன் இலக்கியத்தைக் குறித்தும், நாணமடைய வேண்டிய தேவை இல்லை. 'மடல்' சிலுவையாக மாறியிருக்கின்றது. அவர் தமிழ் மொழிக்கு இன்னொரு உருவ அளவு உண்டு என்பதைப் புலப்படுத்தியுள்ளார்''.

---

## அறிவும் இன்பமும்

*இவ்வுலகுடனும் இவ்வுடம்புடனும் உயிர்கட்குண்டான சேர்க்கை, அவ்வுயிர்கட்கு அறிவையும் இன்பத்தையும் மேன்மேற் பெருகச் செய்தற் பொருட்டே வந்ததாமென்பதூஉம் அதுபற்றியே மக்களும் மற்றையுயிர்களும் இவ்வுலக வாழ்வினைத் துறந்துபோக விரும்பாமல் அதன்கண் நிலைபெற்றிருப்பதற்கே விழைகின்றன ரென்பதூஉம் நினைவிற் பதிக்கற்பாலனவாகும்.*

**மறைமலையடிகள்.**

*'தமிழர் மதம்' பக்-௯௦.*

# தனித்தமிழ் வித்துவான் தேர்வு வந்த வரலாறு

சென்னைப் பல்கலைக் கழகத்திலே இணைப்பாகப் பிறிதொரு மொழியோடு தமிழைப் பயின்றுதான் வித்துவான் பட்டம் பெற வேண்டிய நிலை நீண்ட காலமாக இருந்து வந்தது. எனவே சமற்கிருதம் பயின்றவர்கள் ஓரளவு தமிழைக் கற்று வித்துவான்களானார்களே யல்லாமல் தமிழ்மக்கள் வித்துவான்களாக முடியவில்லை. இந்த இக்கட்டான நிலையினைப் போக்குதல் வேண்டுமென்று பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எம். ஏ., எம். எல். சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 1925ஆம் ஆண்டில் தனித் தமிழில் வித்துவான் தேர்வும், எம். ஏ. பட்டத் தேர்வும் நடத்துமாறு வேண்டி விண்ணப்பக் கடிதம் ஒன்று எழுதி அனுப்பினார்கள். அதன்படி ஒன்று என்னிடம் இருக்கிறது.

அதன் பேரில் தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கலைஞர் மன்றத் (Academic Council) தில் 11-3-1926இல் தனித்தமிழ் வித்துவான் தேர்வை ஏற்குமாறு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றச் செய்தனர். இந்த இனிய நற்செய்தியைச் சிதம்பரம் மீனாட்சி கல்லூரியில் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய முதுபெரும் புலவர் வே.சாமிநாதைய ரவர்கட்கு 16-3-1926இல் கடிதம் எழுதித் தெரிவித்துள்ளார்கள். அக் கடிதச் செய்தியினை அடியிற் காண்க.

கடிதமும் குறிப்பும்

தனித்தமிழில் எம். ஏ. பட்டம் பெறுதற்கும் வாய்ப்புப் பின்னர் ஏற்பட்டுள்ளது. அஃது எந்த ஆண்டில் ஏற்படுத்தப்பட்டதென்பது தெரிந்து பின்னர் அறிவிக்கப் பெறும்.

C. R. Namasivayan

Neydal Agam
6, San Thome High Road,
San Thome, Madras.

16—3—'26

உ
வேலு மயிலுந் துணை

அறிஞர் பெருந்தகையாக விளங்கும் ஐயர் அவர்கள் சமூகத்திற்கு அடியேன் செய்து கொள்ளும் விண்ணப்பம்.

அன்பார்ந்த ஐய,

தேவரீர் முன்பு எழுதிய இரண்டு கடிதங்களும் கிடைக்கப் பெற்றேன். தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றிய பிறகே தங்களுக்குக் கடிதம் எழுத எண்ணியிருந்தேனாதலின்

அவற்றிற்கு உடனே விடை எழுதினேனில்லை. அதன் பொருட்டு அடியேனை மன்னித்தருள்க.

சென்ற 11உ வியாழக்கிழமை 'அக்கடமிக் கவுன்ஸிலில்' வித்துவான் பரீக்ஷைக்குத் தனித்தமிழ் எடுத்துக் கொள்ள லாம் என்னும் விஷயத்தை அடியேன் பிரேரேபித்தேன். அதனைப் பிரம்மஸ்ரீ குப்புசுவாமி சாஸ்திரியார் அவர்களும் ராவ்பகதூர் கிருஷ்ணராவ் பான்ஸிலே அவர்களும் ஆமோதித்தனர். தமிழர் சிலர் ஆக்ஷேபஞ் செய்த காலத்து, பிரம்மஸ்ரீ நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் என் கொள்கையை ஆதரித்துப் பேசினர். அதனால் தனித்தமிழ் வித்துவான் பரீக்ஷை அங்கீகாரம் பெற்றது. தமிழ்த் தெய்வத்தின் தண்ணருள் கிடைத்தது. இந் நற்செய்தியைத் தேவரீருக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின் றேன். மற்றச் செய்திகளை நேரில் தெரிவித்துக் கொள்வேன்.

தணிகைப் புராணப் பிரதிகளை எடுத்துக் கோத்துத் தைத்து வைத்திருக்கின்றேன். 20உ சனிக்கிழமை நேரிற் கொடுத்து வேண்டுவன கேட்டுக்கொள்ள எண்ணியிருக்கின் றேன். 'போர்ட் ஆவ் ஸ்டடீஸ் மீட்டிங்' 20உ இங்கு நடை பெறும் என்னும் செய்தி தங்களுக்கு ரிஜிஸ்திரார் மூலமாகத் தெரிந்திருக்கும். அன்று பாடபுஸ்தகம் அமைத்தல் முதலிய முக்கிய விஷயங்கள் பல தீர்மானம் செய்தல் வேண்டும்; தமிழ் மொழியில் சிரோமணி முதலிய பரீக்ஷைகளைப் பற்றியும் முடிவிட வேண்டும்; ஆதலின் தேவரீர் வருகையை எதிர்பார்க் கின்றேன்.

இங்ஙனம்,
அடியேன்,
(ஒம்) கா. நமச்சிவாயன்

தனித்தமிழில் வித்துவான் தேர்வு நடைபெற வேண்டு மென்ற சீரிய கருத்து முதன் முதலில் சங்க இலக்கியங்களைப் பதித்து வெளியிட்ட உயர்திரு சாமிநாதையரவர்கட்குத் தாமே தோன்றும் என்பதில் வியப்பில்லை. ஆனால், உயர்திரு நமச் சிவாய முதலியாரவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தைத் திருவாளர் குப்புசாமி சாத்திரியாரவர்கள் வழிமொழிந்து பேசியதும், திருவாளர் நீலகண்ட சாத்திரியாரவர்கள் ஆத ரித்துப் பேசியதுமே வியப்பாகும். உயர்திரு ஐயரவர்களின் உண்மையான விருப்பமும், உயர்திரு முதலியாரவர்களின் உயர்ந்த செல்வாக்குமே தீர்மானம் நிறைவேறியதற்குரிய காரணங்களெனின் மிகையாகாது. மதிப்புமிகு ஐயரவர்கள் பதித்த சங்க இலக்கியங்கள் தனித்தமிழ் வித்துவான் தேர் வுக்குப் பாடமாக வைக்கப்பெற்றதன் பின்னரே அவை நன்கு விற்கலாயிற்று. அதனால் அதுகாறும் குறைந்த படிகளையே அச்சிட்டுவந்தவர்கள் கூடுதலான படிகளை அச்சிடலானார்கள். அதுமுதல் தனித்தமிழ் வளர்ச்சியும் பெருகலாயிற்று. வ. சு.

# வாழ்க 'தமிழவேள்'

தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவையின் சார்பில் 17-10-71 இல் சென்னைக் கலைவாணர் அரங்கில், டாக்டர் இராசா சர். முத்தையா செட்டியார் அவர்கள் தலைமையில் தமிழக முதல்வர் டாக்டர், கலைஞர் மு. கருணாநிதி யவர்கட்குப் பாராட்டு விழா வொன்று நடைபெற்றது.

இராசா சர். முத்தையா செட்டியார் அவர்கள் கலைஞருக்குப் பொன்னாடை அணிவித்து, அண்ணாமலைப் பல்கலைக் கழக இலச்சினையை அளித்துச் சிறப்பித்தார்கள்.

முன்னாள் யுனெஸ்கோ துணை இயக்குநர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் கவிஞர் ஆய்வுநூலை வெளியிட்டார்.

மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் கலைஞருக்குத் 'தமிழவேள்' என்னும் பட்ட மளித்துப் பாராட்டிப் பேசுகையில்,

> "தமிழர் வாழ்வில் புதுமலர்ச்சியை உண்டாக்க நெடுங்கால மாகத் தமது உள்ளத்திலே பல திட்டங்களைத் தீட்டி வந்தவர் கலைஞர். அவ்வாறு தாம் தீட்டிய திட்டங்களுக்கெல்லாம் தற்போது தமிழ்மக்கள் கொடுத்திருக்கின்ற வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆசையால் உந்தப்பட்டவர் அவர். அதனாலேயே அவர் பல நல்ல செயல்களையும் மேற்கொண்டுள்ளார். இத்தகைய ஒரு தமிழ்ப் பெருமகனார்க்குத் 'தமிழவேள்' என்ற பட்டம் அளிப்பது அந்தப் பட்டத்துக்குப் பெருமை அளிப்பதாகும்—உணர் வூட்டுவதாகும்"

என்று குறிப்பிட்டார்.

பேராசிரியர் தேவநேயப் பாவாணர், டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் மெ. சுந்தரம், டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், கேரளப் பல்கலை கழகப் பேராசிரியர் டாக்டர் எஸ். வி. சுப்பிரமண்ணியம், மற்றும் பேராசிரி யர்கள் டாக்டர் எஸ். சுப்பிரமணியம், கே வேங்கடாசலம், டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி ஆகியோர் கலைஞர் அவர்களைப் பாராட்டிப் பேசினர். பொள்ளாச்சி வள்ளல் நா. மகாலிங்கம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

டாக்டர் தமிழண்ணல், அப்துல் ரகுமான், நாக முத்தையா ஆகிய கவிஞர்கள் பாமாலை சூட்டினர்.

தமிழகத்தில் தமிழ் மொழி, தமிழர்நலம் நாடி உழைத்த தஞ்சை உமாமகேசுவரன் பிள்ளை, மதுரை சர். பி. டி. இராஜன் ஆகிய இருவரும் முன்னரே தமிழவேள் பட்டம் பெற்றவர்கள் என்பதும் ஈண்டுக் குறிப் பிடத்தக்கது. மூன்றாவதாக அத்தகைய பட்டத்திற்குரியவராக நம்

கலைஞர் அவர்கள் தமிழ் ஆராய்ச்சிப் பேரவையினரால் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது சாலப் பொருத்த முடைத்தாகும். இதைத்தான், "தமிழுக்கு உழைத்த அறிஞர்களில் அவரையும் ஒருவராக நாம் கருது கிறோம் என்பதற்கு இஃதோர் எடுத்துக் காட்டு" எனச் செட்டிநாட் டரசர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

தமிழுக் குழைத்தவர்கள் பலபேர் இருப்பினும் நம் கலைஞர் அவர் களின் உழைப்பு ஒரு தனித்தன்மை வாய்ந்தது. அஃதாவது மற்றைத் தமிழறிஞர்கள் அறிவுப் படை வீரர்களாகப் பணியாற்றிய காலை, இவர் ஆற்றல் படை வீரராக இருந்து சிறை ஒறுப்புகட்கு ஆளாகியும், மாற்றுக் கருத்துடையோரின் தாக்குதல்களைத் தாங்கியும் நாடுகாக்கும் போர் வீரனைப்போல் மொழிப் போர்க்களத்தில் முன்னின்ற செயல் வீரராவார். எனவே 'தமிழவேள்' என்னும் பட்டம் இவருக்குப் பல்லாற் றானும் பொருத்த முடையதே.

தமிழுக்கு உழைத்தல் இரண்டுவகை. ஒன்று தமிழ் வளர்ச்சியில் நாட்டஞ் செலுத்தல். மற்றொன்று வளரும் தமிழ்ப் பயிருக்கு வேலியாக நின்று பாதுகாத்தல். இவ்விரு பணிகளையும் நம் கழகம் முறையே நூற் பதிப்புக் கழகமாகவும், தமிழ்ப் பாதுகாப்புக் கழகமாகவும் நின்று ஆற்றி வருகின்ற காரணத்தால் தமிழவேள் பட்டம் பெற்ற கலைஞருக்குத் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வது சாலப் பொருந்துவதாகும். தமிழவேள் அவர்கள் தொடர்ந்து தமது தமிழ்காக்கும் பணியினைச் செய்வார்களாக.

வாழ்க தமிழவேள்.

---

# செய்திகளும் குறிப்புக்களும்

## சிறுவர் கலைக் களஞ்சிய வெளியீட்டு விழா

"சிறுவர்களின் உள்ளத்தில் அறிவியல் கருத்துக்கள் இடம் பெறும் வண்ணம் தேவையான பிறமொழிச் சொற்களையும் தமிழாக்கி வெளியிடு தல் தவறாகாது. புதுமைக் கருத்துக்களை நம் சிறுவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் நூல்கள் வெளிவருதல் வேண்டும்" என்று அண்மையில் சென்னையில் நடைபெற்ற சிறுவர் கலைக் களஞ்சியத்தின் மூன்றாவது தொகுதி வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டுப் பேசிய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி குறிப்பிட்டார்.

தமிழ் வளர்ச்சிக் கழகச் சார்பில் நடைபெற்ற இவ்விழாவிற்கு முன்னாள் அமைச்சர் திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் தலைமை தாங்கினார். "அறிவியற் கருத்துக்களை வழங்கும் இத்தகைய அழகிய நூல்கள், சிறுவர் உள்ளத்தைக் கவரும் வரையில் மேலும் பல வெளி வருதல் வேண்டும்" என அவர் தம் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

## 15ஆம் நூற்றாண்டு வண்ண ஓவியங்கள்

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவலஞ்சுழி என்னும் சிவப் பதியில் சிவன் கோயில் மண்டபத்தின் கூரையின் ஒரு பகுதியில் 15 ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்கள் சில சிதைந்த நிலையில் அண்மையில் மாநில அரசின் புதைபொருளாராய்ச்சியாளரால் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இம் மண்டபம் சோழர் காலத்தில் உக்கல் உடையான் எதிரிலிச் சோழன் பல்லவராயன் என்னும் சோழ மன்னனால் கட்டப்பட்டது என்பது அம்மண்டபத் தூண்களில் செதுக்கப்பட்டுள்ள அவன் பெயரால் அறியப்படுகிறது.

## திரு. வ. உ. சி. நூற்றாண்டு விழா

திரு. வ. உ. சிதம்பரனார் அவர்களின் நூறாவது பிறந்தநாள் அடுத்த ஆண்டு வருகிறது. அதனைச் சிறப்பாகக் கொண்டாடவும், அந்நாளைத் தேசிய விடுமுறையாக விடத் தாம் விரும்புவதாகவும் அதற்காக மைய அரசுக்கு எழுதிக் கேட்டிருப்பதாகவும் அண்மையில் சட்டப் பேரவையில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கூறினார்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் நாட்டு விடுதலைக்கு உழைத்த வீரர்களுள் வ. உ. சி அவர்கள் தலைசிறந்தவர்களாவர் எனலாம். நாட்டுப் பணியில் ஈடுபடுவோர் பலர் மொழி-இனம்-சமயம் ஆகியவற்றை மறந்திடுவர். ஆனால் வ. உ. சி. அவர்கள் அத்தகையர் அல்லர். நல்ல தமிழறிஞர் - சமயப்பற்றாளர் - உரையாசிரியர் - செய்யுளியற்றுந் திறமையாளர், மொழி பெயர்ப்பாளர் - தமிழர் நலம் நாடிய தகைமையாளர். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் அவர் தமிழர் நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்திருக்க வேண்டியவர். அத்தகைய பெருமகனாரின் நூற்றாண்டு நினைவுவிழா சீருஞ் சிறப்புமாகக் கொண்டாடப்பட வேண்டிய ஒரு விழாவாகும்.

## கலைஞர் முதல்வரின் அமெரிக்கப் பயணம்

அமெரிக்க அரசின் அழைப்பிற்கிணங்க 8-11-71இல் தமிழக முதல்வர் டாக்டர், கலைஞர் கருணாநிதியவர்கள் அமெரிக்காவிற்குப் பயணமானார். பெருமக்கள் பலர் வாழ்த்துக்கூறி வழியனுப்பினர். நம் கழகச் சார்பில் கழக ஆட்சியாளர் அவர்கள், கழக வழி வெளிவந்துள்ள ஆங்கிலத்தில் பத்து நீதிநூல்கள் அடங்கியுள்ள "Ten Tamil Ethics" என்ற நூலின் 12 படிகளை வழங்கி, வாழ்த்தி வழியனுப்பினார். கலைஞரின் சுற்றுப் பயணத்திற்குக் கழக நூல்கள் தக்க ஆக்கமளிக்குமென நம்புகிறோம். மேலும் அவரது சுற்றுப்பயணம் அறிவியல் துறைக்கும் மொழித் துறைக்கும் ஆக்கம் அளிப்பதாகும். கலைஞரின் பயணம் வெற்றியோடு சிறக்க வாழ்த்துகிறோம்.


---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில்
திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

# திருநெல்வேலி, குமரகுருபரர் குழந்தைப்பள்ளி
## நான்காவது ஆண்டு விழா 30-11-1971



திரு. பி. பத்மநாபன், எம். எல். ஏ., அவர்கள்
தலைமையில் திரு. கா. வ. முத்தையாபிள்ளை
அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல்.



பள்ளிக் குழந்தைகள் கிளர்ச்சியுடன் நடித்துக் களிப்பூட்டுகின்றன.